
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



கும்பிடுவோர் நெஞ்சத்துக் குறைகள் மாற்றும்
குணசீலப் பெருமானே! வெங்க டேசா!
செம்பொன்போல் மனக்கோயில் திறந்து வைத்தோம்
திருமகளின் கரம்பற்றி வருவாய் அப்பா.

ஜனவரி 1990

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 12
சுக்ல
மார்கழி
ஜனவரி
1990

ஆவியை அரங்க மாலை அழுக்குடம்பு எச்சில் வாயால்
தூய்மையில் தொண்டனேன் நான் சொல்லினேன் தொல்லை நாமம்
பாவியேன் பிழைத்தவாறென்று அஞ்சினேற்கு அஞ்சலென்று
காவிபோல் வண்ணர்வந்து என்கண்ணுளே தோன்றினாரே.

— திருமங்கையாழ்வார்


ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001
தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00



தேவகோட்டை - பழநிப் பாத யாத்திரைப் பயண விவரம்

நிகழும் சுக்கில ஸூ தை மீ 17உ (30-1-90) செவ்வாய் கிழமை முதல் மாசி மீ 7உ (19-2-90) திங்கட்கிழமை முடிய 21 நாட்கள்

சுக்கில ஸூ தை மீ 17உ (30-1-90) செவ்வாய் தேவகோட்டை நகரப் பள்ளிக்கூடத்தில் காவடி கட்டி வைத்துப் பூஜை.

தை 18 உ (31-1-90) புதன். காவடிகள் நகர்வலம் வந்து சிலம்பணி பிள்ளையார் கோவிலில் தங்குதல்.

தை 19 உ (1-2-90) வியாழன் காலை, காவடியும் பாதயாத்ரீகர்களும் புறப்படுதல். பகல் ஊத்தாங்கிணற்றில் [சங்கராபுரம்] காவடி நிவேத்தியம். இரவு குன்றக்குடி.

தை 20 உ (2-2-90) வெள்ளி. காலை, குன்றக்குடியிலிருந்து புறப்படுதல். பகல் கண்டவராயன்பட்டி கண்மாயில் காவடி நிவேத்தியம். இரவு மருதுப்பட்டித் தோப்பில் முதல் நாள் பூஜை.

தை 21 உ (3-2-90) சனி. காலை, சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் கோவிலில் காவடி தங்குதல். பகல், மணப்பச்சேரியில் காவடி நிவேத்தியம் [பாதயாத்ரீகர்கள் வெள்ளாளபட்டி வழியாக வருதல்] இரவு சமுத்திராபட்டியில் இரண்டாம் நாள் பூஜை.

தை 22 உ (4-2-90) ஞாயிறு. காலை, நத்தத்தில் வாணியர் பஜனை மடத்தில் பானக பூஜை. பகல் உப்பாற்றில் காவடி நிவேத்தியம். இரவு, இடைச்சிமடத்தில் மூன்றாம் நாள் பூஜை.

தை 23 உ (5-2-90) திங்கள். காலை, திண்டுக்கல் அபிராமி அம்மன் கோவிலில் காவடி தங்கல். பகல், ரெட்டியார் சத்திரத்தில் காவடி நிவேத்தியம். இரவு, நகரத்தார் ஊருணிஎன்கிற செம்மடைப் பட்டியில் ஊஞ்சல். நான்காம் நாள் பூஜை.

தை 24 உ (6-2-90) செவ்வாய். காலை, செம்மடைப்பட்டியில் பானகபூஜை. பகல் [ஒட்டன்சத்திரம் கடந்து] குழந்தைவேலன் சந்நிதியில் காவடி நிவேத்தியம். இரவு, அடையாளவேலை தரிசித்து கலிங்கப்பையா ஊருணியில் (சத்திரப்பட்டி சாலையில்) ஐந்தாம் நாள் பூஜை.

தை 25 உ (7-2-90) புதன். காலை, ஆயக்குடி பெருமாள் கோவிலில் பானக பூஜை. பகல் இடும்பன் குளத்தில் நீராடி இடும்பன் மலைச் சரிவில் காவடி நிவேத்தியம். இரவு, பழநி அன்னதான மடத்தில் முதல் நாள் பூஜை.

தை 26 உ (8-2-90) வியாழன். அன்னதான மடத்தில் இரண்டாம் நாள் பூஜை. தைப்பூசம்.

தை 27 உ (9-2-90) வெள்ளி. அன்னதான மடத்தில் மூன்றாம் நாள் பூஜை.

தை 28 உ (10-2-90) சனி. அன்னதான மடத்தில் நான்காம் நாள் பூஜை. மகம் நாளான இன்று பகல் இரண்டு மணிக்கு மேல் புறப்பட்டு மலையில் காவடி செலுத்துதல்.

தை 29 உ (11-2-90) ஞாயிறு. அன்னதான மடத்தில் ஐந்தாம் நாள் பூஜை. தனியார் அபிஷேகங்கள். "பழம்நீ" பாதயாத்திரைக் குழுவின் சார்பில் பட்டக்காரர் மடத்தில் மதிய உணவு.

தை 30 உ (12-2-90) திங்கள். அன்னதானமடத்தில் அடுப்படிப் பூஜை. சுவாமி புறப்பாடு. தனியார் அபிஷேகங்கள்.

மாசி மீ 1 உ (13-2-90) செவ்வாய். மலையில் சந்தனக்குழப்பு அபிஷேகம். பாதயாத்ரீகர்கள் விடைபெற்று ஊர் திரும்புதல்.

மாசி 2 உ (14-2-90) புதன். இரவு ஆறு மணி அளவில் காவடி விடைபெற்று ஊர் திரும்புதல்.

மாசி 3 உ (15-2-90) வியாழன். காவடி வழிநடையாக ஊர் திரும்புதல். பகல் திண்டுக்கல் மலைக்கோட்டை ஐயப்பன் கோவிலில் பூஜை.

மாசி 4 உ (16-2-90) வெள்ளி. காவடி வழிநடையாக ஊர் திரும்புதல். இரவு சமுத்திராபட்டியில் பானக பூஜை.

மாசி 5 உ (17-2-90) சனி. காவடி வழிநடையாக ஊர் திரும்புதல். இரவு மருதுபட்டித் தோப்பில் பூஜை.

மாசி 6 உ (18-2-90) ஞாயிறு. திருப்புத்தூர் வழியாக காலை ஏழு மணியளவில் குன்றக்குடி வந்தடைதல். இரவு பூஜை.

மாசி 7 உ (19-2-90) திங்கள் குன்றக்குடியிலிருந்து புறப்பட்டு தேவகோட்டை வந்து சேர்தல்.

நன்றி: "பழம்நீ" பாத யாத்திரைக் குழு

மேலைச்சிவபுரி - பழநி பாத யாத்திரைப் பயண விவரம்

நிகழும் சுக்கில ஆண்டு தைத் திங்கள் 21 ஆம் நாள் (3-2-1990) சனிக்கிழமை முதல் மாசித் திங்கள் 5ஆம் நாள் (17-2-90) சனிக்கிழமை முடிய 15 நாட்கள்.

சுக்கில ஹு தை மீ 21 உ (3-2-90) சனிக்கிழமை இரவு நெற்குப்பையிலிருந்து காவடிகளும் மேலைச்சிவபுரியிலிருந்து சக்தி வேலாயுத சுவாமியும் புறப்படுதல்.

தை 22 உ (4-2-90) ஞாயிறு சமுத்திராபட்டியில் மாலையில் பூஜை. இரவு சமுத்திராபட்டியில் தங்கல்.

தை 23 உ (5-2-90) திங்கள் பகலில் குசவபட்டியில் பூசை. இரவு திண்டுக்கல் அபிராமி அம்மன் கோவிலில் தங்கல்.

தை 24 உ (6-2-90) செவ்வாய் பகலில் செம்மடைப்பட்டியில் பூஜை. இரவு ஒட்டன் சத்திரம் குழந்தைவேலன் சன்னதியில் தங்கல்.

தை 25 உ (7-2-90) புதன் ஆயக்குடி கடுக்காய்ப் பாறையில் காவடி தங்கல். வேலாயுத சுவாமி அன்னதான மடம் சென்றடைதல். மடத்தில் வேல்களுக்கு முதல் நாள் பூஜை.

தை 26 உ (8-2-90) வியாழன் தைப் பூசம். அன்னதான மடத்தில் வேல்களுக்கு இரண்டாம் நாள் பூஜை.

தை 27 உ (9-2-90) வெள்ளி. மடத்தில் வேல்களுக்கு மூன்றும் நாள் பூஜை.

தை 28 உ (10-2-90) சனிக்கிழமை பகல் 2 மணிக்கு மலையில் பால் குடம், காவடிகள் செலுத்துதல். நான்காம் நாள் பூஜை.

தை 29 உ (11-2-90) ஞாயிறு. மடத்தில் ஐந்தாம் நாள் பூஜை.

தை 30 உ (12-2-90) திங்கள். வேலாயுத சுவாமிக்காக மலையில் தெண்டாயுத பாணிக்கு அபிஷேகம்.

மாசி மீ 1 உ (13-2-90) செவ்வாய். அன்னதான மடம்.

மாசி 2 உ (14-2-90) புதன் மாலை 6 மணிக்கு வேலாயுத சுவாமியும் காவடிகளும் பழநியிலிருந்து ஊருக்குப் புறப்படுதல்.

மாசி 3 உ (15-2-90) வியாழன். பகல் திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் கோவில். இரவு வேலாயுத சுவாமிக்கு அபிஷேகம்.

மாசி 4 உ (16-2-90) வெள்ளி. பகல் சமுத்திராபட்டி. மாலை அபிஷேகம். இரவு பானக பூஜை.

மாசி 5 உ (17-2-90) சனிக்கிழமை. அதிகாலையில் புறப்பட்டு நெற்குப்பைக் காவடிகள் சிங்கம்புணரி வழியாக நெற்குப்பை சென்றடைதல். சக்தி வேலாயுத சுவாமி பிரான்மலை வழியாக மேலைச் சிவபுரி வந்து சேர்ந்து சுவாமி நாத விநாயகர் கோவிலில் அபிஷேக ஆராதனைகளை முடித்து சுப்பையா கோவில் இருப்பிடம் சேர்தல்.

தகவல் : சிங்கப்பூர் மு. அ. இராமநாதன், மேலைச்சிவபுரி.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்



—48—

கனடாவிலிருந்து சிக்காக்கோ வந்து எனது அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இலண்டன் வந்து சேர்ந்தேன். எங்கள் குடும்ப நண்பரான டாக்டர் ராஜேந்திரனிடம் மதுரையில் ஜூனியராகப் பணியாற்றிய டாக்டர் ஜெயப்பிரகாஷ் குடும்பத்தோடு இலண்டனில் வசித்து வந்தார். அவருடைய அன்பு வேண்டுகோளை ஏற்று நானும் என் மனைவி கமலா, மகள் ஆனந்தி, மாப்பிள்ளை திரு. பெரியகருப்பன், டாக்டர் திரு. ராஜேந்திரன், அவரது மனைவி, மகன், மகள் எல்லோரும் ஒரு வாரம் இலண்டனில் ஜெயப்பிரகாஷ் இல்லத்தில் தங்கினோம். பொதுவாக அமெரிக்காவில் இருக்கிற அளவு நகரத்தார்கள் இலண்டனில் இல்லை. மிதிலைப்பட்டி வேலாயுதம் செட்டியார் அவர்கள் எனது இனிய நண்பர்; நல்ல தமிழ் ஆர்வமுடையவர்



இலண்டனில் பக்கிங்காம் அரண்மனை முன்பு வி. என். சிடி. அவர்கள்.

கள்; நட்பிற்கு இலக்கணம் வகுப்பவர்கள் நானும் அவர்களும் மலேசியாவில் நீண்ட காலம் ஒன்ருக இருந்து வந்தோம். அவர்கள் மகன் சிதம்பரம் இலண்டனில் டாக்டராகப் பணியாற்றுகிருர்கள். நான் இலண்டனில் தங்கியிருந்த ஒரு வாரமும் அவர்கள் என்னுடன் இருந்து இலண்டனைச் சுற்றிக் காட்டினுர்கள். கல்லல் தியாகராஜன் செட்டியார் அவர்கள் குடும்பத்துடன் அங்கு இருக்கிருர்கள். லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் மகன் ராமநாதன், அவர்களுக்கு நெருங்கிய நண்பர். மதுரைக்கு வந்திருந்தபோது இராமநாதன் அவர்கள் என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். இலண்டனில் அவர்கள் என்னை அவர்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்ருர்கள். ஒரு நாள் அவர்களோடு தங்கி ஊரைச் சுற்றிப் பார்த்தேன். என்னுடைய பள்ளித்தோழர் கீழச்சிவல்பட்டி சேது இலண்டனில் இருந்தார், நான் அங்கு வந்தது அறிந்து என்னை அழைத்துச் சென்று விருந்து கொடுத்தார். மேலும் சில நகரத்தார்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனுல் அமெரிக்காவைப்போல நகரத்தார் எல்லோரும் ஓர் இடத்தில் சந்திப்பது இல்லை.

டாக்டர் ஜெயப்பிரகாஷ் மிக அன்பாகப் பழகினுர். நகரத்தார்கள் யார் சென்ருலும் அவரது இல்லத்துக் கதவுகள் திறந்து இருக்கும். நகரத்தார் மட்டுமில்லாது, குறிப்பாக மதுரை மாவட்டத்திலிருந்து யார் சென்ருலும் அவர்களது இல்லத்தில் தங்காமல் வந்தது இல்லை. விருந்தோம்பலில் அவ்வளவு சிறந்தவர்கள். டாக்டர் ஜெயப்பிரகாஷ் இலண்



வலையபட்டி, 'பாரத ரத்னு' பிஎல். கே குப்பான் செட்டியார் அவர்கள் புதல்வன் திருவளர் செல்வன் சின்னையாவுக்கும் பூலாங்குறிச்சி கரு. சி. அ. கருப்பஞ் செட்டியார் அவர்கள் பேத்தியும் டாக்டர் கரு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் புதல்வியுமான திருவளர் செல்வி சிவகாமிக்கும் 4-12-89 அன்று பூலாங்குறிச்சியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்குத் தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் வந்திருந்து சிறப்பித்தனர்.

டன் முழுவதையும் சுற்றிக் காண்பித்தார்கள். சுறுசுறுப்பில் தேனீக்கு நிகரானவர். அவரைப் போலவே அவரது மனைவியும் அன்போடு உபசரித்து உணவளிப்பார்கள்.

இலண்டனில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் ஆலயம் பதினேரும் நூற்ருண்டில் கட்டப்பட்டது. நான் இன்டர்மீடியட் படித்த போது வெஸ்ட் மினிஸ்டர் ஆலயம் பற்றி பாடப் புத்தகத்தில் படித்து இருக்கிறேன். அதை நேரில் பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆலயம் மிக சிற்பத்திறன் கொண்டது. கலை உணர்வோடு கட்டப்பட்டிருக்கும் அந்தக் கட்டிடத்தின் உள்ளே முக்கியமானவர்களின் உடல்களை அடக்கம் செய்து இருக்கிருர்கள். அதே நேரத்தில் பிரிட்டிஷ் அரசர்களும், அரசிகளும் அங்கே தான் முடிசூட்டிக் கொள்கிருர்கள்.

டவர் ஆப் லண்டன் போய்ப் பார்த்தோம். அங்கு அரசர்கள் அணிந்து கொள்ளுகிற விலையுயர்ந்த நகைகளையும், மகுடங்களையும் வைத்து இருக்கிருர்கள். நமது நாட்டிலிருந்து எடுத்துச் சென்ற கோஹினூர் வைரமும் அங்குதான் இருக்கிறது. ஆனல் அதை நாம் அன்பளிப்பாக அளித்ததாக அங்கு எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. டிக்கெட் எடுத்து கியூவில் நின்று பார்க்க வேண்டும். அவ்வளவு கூட்டம் அங்கு வருகிறது. பக்கிங்ஹாம் அரண்மனையை வெளியிலிருந்து பார்த்தோம். அங்கு உள்ளே யாரையும் அனுமதிப்பது இல்லை. வெளியிலிருந்து பார்ப்பதற்கு பெரிய அரண்மனையாகத் தோற்றமளிக்கவில்லை. ஆனல் உள்ளே

எல்லா வசதிகளும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பிரிட்டிஷ் மக்கள், அரச குடும்பத்தினருக்கு நல்ல மதிப்பு அளிக்கிறார்கள்.

தேம்ஸ் நதி மிக அழகாக இருக்கிறது. அது இலண்டன் நகருக்குள் சுற்றிச் சுற்றி வருகிறது. இலண்டனில் எங்கு பார்த்தாலும் சிலைகளாக இருக்கின்றன. டவுனிங் தெருவில் உள்ள 10ஆம் எண் வீடு உலகப் புகழ் பெற்றது. அதற்குக் காரணம் இங்கிலாந்தில் பிரதமராகத் தேர்ந்து எடுக்கப்படுபவர்கள் இங்குதான் வசிக்கிறார்கள். அந்த வீடு சின்ன வீதியில் ஓரளவு பெரிய வீடாக இருக்கிறது. உலகப் புகழ் பெற்ற பிக்பென் கெடிகாரத்தையும் பார்த்தோம்.

(வளரும்)

வெட்டுடைய காளி

கொல்லங்குடி உடையப்பன்

வீருடையாள் வெட்டுடையாள் விரும்புமன்பர்
  வேண்டுவரம் தந்தருளும் வெற்றிச் செல்வி
தாருடையாள் தங்கமணி வயிரமுடன்
  சந்தனமுங் கமழ்கின்ற தாம ரையாள்
கூருடையாள் வன்கொடுமை கொல் கோபக்
  கனலுடையாள் குளிருடையாள் குணமுடையாள்
பேருடையாள் பேணிவளர் பெட்புடையாள்
  பேரன்புத் தேவியவள் எங்கள் காளி!


அறியாது செய்பிழைகள் பொருத் தருள்வாள்
  அறிந்தறிந்து பிழையிழைத்தால் அழித்தொழிப்பாள்
குறியேதும் இல்லாத தற்குறிக்கும்
  தான்குழைவாள் கோடிநலம் கொடுத்துக் காப்பாள்
குறியாக கயமையொன்றே கொண்டபுல்லர்
  குலையறுப்பாள் குவலயத்தைக் காத்துநிற்பாள்
குறையாத வளங்குவியக் கும்பிட்டு
  வாழ்குடிகள் குன்றாக ஓங்கச் செய்வாள்

வளியனலாய் நல்லவர்க்கே வளமளித்து
  வல்லரக்கர் வழிமுடிக்க வல்லதேவி
களிவளரக் கலியகலக் கருணைமழை
  பொழிந்தருளும் கார்முகிலாய்க் காக்கும்தேவி
களிநிலத்தில் கனிவளரக் கதிர்விளைய
  உழைத்துயர்வார் கரமுறைந்து களிக்குந் தேவி
களியெடுத்து கவின்கலங்கள் புனைகலைஞர்
  கரம்வளர்ந்து குலங்காக்குங் காளிதேவி

வங்கித் துறையின் சாதனையாளர் கிருஷ்ணன்

திரு. எல். கிருஷ்ணன் அவர்கள் உய்யக்குண்டான் சிறுவயலில் பிறந்தவர்கள். மாத்தூர்க் கோயில் அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களது தந்தையார் திரு. ராம. லெட்சுமணன் செட்டியார் - தாயார் திருமதி அழகம்மை ஆச்சி ஆவார்கள். இவர்களது அய்யா இராமநாதன் செட்டியார் அவர்கள் வெற்றியூரிலிருந்து உ. சிறுவயலுக்குச் சுவீகாரம் வந்தவர்கள். திரு. கிருஷ்ணன் அவர்கள் பிறந்த 10 நாட்களில் அவர்களது தாயாரும் 5 ஆவது வயதில் தந்தையாரும் காலமாகி விட்டார்கள். எனவே தனது அம்மான் காரைக்குடி அ. ராம. வெ. லெட்சுமணன் செட்டியார் அவர்களின் ஆதரவில் இவர்கள் வளர்ந்து சென்னை மாநிலக் கல்லூரியில் இண்டரும் பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. யும் கற்றுத் தேறினார்கள்.

கல்வி முடிந்ததும் இவர்கள் பாங்க் ஆஃப் மதுரையிலும் ரிசர்வ் வங்கியிலுமாகப் பல ஆண்டுகள் சிறந்த பணியாற்றினார்கள். ரிசர்வ் வங்கி உத்தரவுப்படி மீண்டும் பாங்க் ஆஃப் மதுரையின் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றி தன் பதவிக் காலத்தில் பல அரிய சாதனைகளை நிகழ்த்தி பலராலும் பாராட்டுப் பெற்றுள்ளார்கள்; வங்கித் துறையில் புதிய வரலாறு படைத்துள்ளார்கள்.



சாதனையாளர் திரு. எல். கிருஷ்ணன்

திரு கிருஷ்ணன் அவர்களது வங்கிப் பணி பற்றியும் அவர்கள் நிகழ்த்திய சாதனைகள் பற்றியும் ''நகரத்தார் குரல்'' வாசகர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு அண்மையில் சென்னை சென்றிருந்த நான், அவர்களை நேர் முகம் கண்டேன். முதலில் தயங்கியவாறு பேட்டி அளித்த அவர்கள் போகப் போக உணர்ச்சி வயப்பட்டுப் பேசினுர்கள். அதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

''அண்ணே.. வணக்கம்..''

''வாங்க.. வாங்க.. இப்படி உட்காருங்க..''


''பாங்க் ஆஃப் மதுரையில் நீங்கள் எப்படிச் சேர்ந்தீர்கள்? அங்கு நீங்கள் ஆற்றிய பணிகள் பற்றிச் சொல்லலாமா ..?''

''சி. வி. சிடி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் எங்கள் பங்காளி. அவர்கள் கருமுத்துத் தியாகராசச் செட்டியார் அவர்களின் நெருங்கிய நண்பர். வெ. அவர்கள் மதுரை மீனுட்சி மில்லில் என்னைச் சேர்த்துக் கொள்ளும்படியாக கருமுத்துவுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் தந்தார்கள். நான் கருமுத்து அவர்களைக் கொடைக்கானலில் பார்த்தேன். இதற்கிடையில் அப்போதைய, பாங்க் ஆஃப் மதுரையின் செக்ரடரி திரு. T. D. பிள்ளை என்னை விரும்பிப் பாங்க் ஆஃப் மதுரையில் சேர்த்துக் கொண்டார்கள். நான் 1945ல் பாங்க் ஆஃப் மதுரையில் சேர்ந்து தலைமை அலுவலகத்தில் Asst. Accountant ஆகப் பத்து மாதங்களும் மதுரை தெற்கு மாசி வீதிக் கிளையில் ஏஜண்டாக ஆறு மாதங்களும் சேலத்தில் மூன்று ஆண்டுகளும் பணியாற்றினேன்.''

ரிசர்வ் வங்கிப் பணி

''அதற்குப் பிறகு நீங்கள் ரிசர்வ் வங்கியில் எப்படிச் சேர்ந்தீர்கள்..? அங்கு எவ்வளவு காலம் பணியாற்றினீர்கள்.. கொஞ்சம் சொல்லுங்களேன்...?''

''நான் ரிசர்வ் வங்கியில் சேருவதற்கு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் குமாரர் ஆர் இராமநாதன் செட்டியார் அவர்கள் செய்த உதவியே முக்கிய காரணம். 1950 ஆம் ஆண்டு வாகில் ஒரு திருமண வீட்டில் என்னைச் சந்தித்த அவர்கள் நான் பணிபுரியும் பாங்க் சிறிய பாங்க் என்றும் எனக்கு எல்லாத் தகுதிகளும் இருப்பதாகவும், தான் ரிசர்வ் பாங்கில் டைரக்டராக இருப்பதாகவும் ரிசர்வ் பாங்கிலிருந்து வேலை விஷயமாக விளம்பரம் வரும்போது விண்ணப்பம் அனுப்பி விட்டுத் தனக்குத் தகவல் சொல்லும்படியும் சொன்ஞர்கள். அவர்கள் கூறியபடி சில மாதங்களில் ரிசர்வ் பாங்க் ஆபீஸர் வேலைக்கு ஆட்கள் தேவை என விளம்பரம் வந்தது அதில் கேட்டிருந்த தகுதிகள் எல்லாம் எனக்குப் பொருந்தியிருந்தன. ஆகவே உடனே நான் விண்ணப்பம் அனுப்பிவிட்டு ராம. அவர்களைச் சந்தித்துத் தகவல் சொன்னேன். பிறகு ரிசர்வ் பாங்க் முறைப்படி மூன்று இண்டர்வியூக்கள் நடந்தன நானும் நன்ருகச் செய்திருந்தேன். அதையும் ராம. அவர்களிடம் சொன்னேன், அவர்களும் நிச்சயமாக வேலை கிடைக்கும் என்று சொன்ஞர்கள் அதே போல் 1950 ஜூனில் ரிசர்வ் பாங்கில் ஆபீஸர் வேலை கிடைத்தது. நிச்சயமாக திரு. ராம. அவர்களின் சிபாரிசினுல்தான் அந்த வேலை எனக்குக் கிடைத்தது என்று உறுதியாக நம்புகிறேன். ஏனெனில் வேலைக்குப் பலத்த போட்டி இருந்தது. பெருத்த சிபாரிசுகளுடன் பலர் இருந்தார்கள். இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் ஆயிரத்துக்கும் மேல் விண்ணப்பங்கள் வந்திருந்தன வெள



ஒரு நிகழ்ச்சியில் திரு. தமிழ்வாணன், சாதனையாளர் திரு. எல். கிருஷ்ணன், நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார்.

றும் முதல் இன்டர்வியூவிற்கு 250 பேரையும் இரண்டாவது இன்டர்வியூவிற்கு 75 பேரையும் மூன்றாவது இன்டர்வியூவிற்கு 25 பேரையும் அழைத்திருந்தனர் என்றும் தெரிய வந்தது. இதில் கடைசி இன்டர்வியூ முடிந்த பிறகு இந்தியா முழுவதற்குமாக 8 பேரை ஆபீஸராக நியமித்தார்கள் திரு. ராம. அவர்கள் அவர்களாகவே என்னை அழைத்து விண்ணப்பிக்கச் சொல்லி, சிபாரிசு செய்து சேர்த்துவிட்டது அவர்களது பெருந்தன்மையைக் காட்டுகிறது.''

''நல்லது. தங்களது ரிசர்வ் வங்கிப் பணி பற்றிச் சொல்லலாமா?''

''நான் ரிசர்வ் பாங்கில் பம்பாய்க் கிளையில் 4 ஆண்டுகளும் திருவனந்தபுரம் கிளையில் 5 ஆண்டுகளும் கான்பூர் (உ. பி.) கிளையில் 2 ஆண்டுகளும் பம்பாய் பாங்கர்ஸ் டிரெயினிங் காலேஜில் இன்ஸ்ட்ரக்டராக 5 ஆண்டுகளும் பணியாற்றினேன். பின் ரிசர்வ் பாங்க் கொள்கைப்படி 1971 ஆகஸ்ட் முதல் 1976 ஆகஸ்ட் வரை 5 ஆண்டுகள் பாங்க் ஆஃப் மதுரையில் சேர்மனாகப் பணியாற்றினேன்.''

பாங்க் ஆஃப் மதுரையின் வளர்ச்சி

''உங்கள் காலத்தில் பாங்க் ஆஃப் மதுரையின் வளர்ச்சி பற்றித் தெரிந்து கொள்ளலாமா?''

''நான் பாங்க் ஆஃப் மதுரையில் சேர்ந்தபோது (1971 ஆகஸ்டில்) அங்கு 8.75 கோடி டெபாசிட் இருந்தது. 4 மாதங்களில் அது 13.75 கோடி ஆயிற்று. 1976ல் அதுவே 65 கோடி ஆயிற்று. இது பற்றி கருமுத்து தி. அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் "Not only I am proud of you, But the community itself proud of you' என்று குறிப்பிட்டிருந்தார்கள். 'How did perform you the magic' என

ரிசர்வ் பாங்க் டெபுடி கவர்னர் டாக்டர் ஹசாரி அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.''

''நான் பாங்க் ஆஃப் மதுரையின் டெபாசிட்டுக்காகவும் வளர்ச்சிக்காகவும் ஒரு ஆண்டில் இலட்சம் மைல்கள் சுற்றியிருக்கிறேன். கருமுத்து தி. அவர்கள் இது குறித்து எனக்குப் போன் செய்தபோது ''அதிகமாகச் சுத்தாதே! டெபாசிட் அதுவா வருகிறபடி வரட்டும். ரொம்ப அலையாதே!'' என்று சொன்னார்கள். அந்த ஐந்து ஆண்டுகளை Golden period எனலாம். கருமுத்து தி. அவர்கள் என்னை முதலாளிபோல் நடத்த விட்டார்கள். பாங்க் நிர்வாகத்தில் ஒரு முறைகூட தலையிட்டதில்லை.''

பெண்களுக்கு வேலை

''நீங்கள் பாங்க் ஆஃப் மதுரையின் தலைவராக இருந்தபோது அதில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்ததைப் பலர் பெருமையாகக் கூறுகிறார்களே, அதுபற்றிச் சொல்லலாமா?''

''நான் தலைவராக வருவதற்கு முன் பாங்க் ஆஃப் மதுரையில் அப்படி, இப்படி ஆட்களைத் தேர்வு செய்தார்கள் எனக் கேள்விப்பட்டேன். 1972ல் நான் முறைப்படி ஆட்களைத் தேர்வு செய்து 400 பேர்களை அப்பாயின்ட்மெண்ட் செய்தேன். அதில் 200பேர் பெண்கள்; இதில் 150பேர் நகரத்தார் பெண்கள்.''

''பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?''


''என் அப்பத்தா சீதை ஆச்சி அவர்கள் 'நம் இனத்தவர்கள், நம் உறவினர்கள், நம் பங்காளிகளுக்கு நம்மால் முடிந்த அளவு உதவி செய்ய வேண்டும். நாம் எவ்வளவு உதவி செய்கிறோமோ, அவ்வளவுக்குப் புண்ணியம்' என என்மனைவியிடம் அடிக்கடி சொல்வார்கள். செட்டி நாட்டரசர் குடும்பமும் இதுபோல் நல்லனவற்றையே செய்து வருகிறது. இதை அடிப்படையாக வைத்தே பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க விரும்பினேன். ''பையனைப் பாங்கில் சேர்க்க வேண்டும்; அவன் பாங்கில் இருந்தால் நல்ல இடத்திலிருந்து கலியாணம் வரும்'' என், என்னைத் தேடி வரும் பல ஆச்சிமார்கள் கூறினார்கள். அதை நினைத்துப் பார்த்தேன். பெண்களுக்கு பாங்கில் வேலை வாய்ப்புக் கொடுத்தால் அவர்களது வாழ்க்கை சிறப்பாக அமையும் என நம்பினேன். கருமுத்து தி. அவர்களுடைய நிறுவனங்களில் பெண்களை வேலைக்குச் சேர்ப்பதில்லை எனப் பலர் சொன்னார்கள். பாங்க் ஆஃப் மதுரையைப் பொறுத்தவரை இயக்குநர்களில் நம்மவர்களே அதிகம்; டெபாசிட்டுகளில் நம்மவர்களுடைய தொகையே அதிகம். எனவே எதிர்ப்பையும் மீறி பெண்களைச் சேர்த்தேன். இன்று அவர்கள் எல்லோரும் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள்.''

''ராஜா வீடும் நாங்களும் வேலை வாய்ப்பிற்கு நிறையச் செய்திருக்கிறோம். ஆனால் நாங்கள் பெண்களுக்கு எதுவும் செய்யவில்லை. நீங்கள் செய்திருக்கிறீர்கள்'' என தொழிலதிபர் அ. மு. மு. அருணாசலம் செட்டியார் அவர்கள் கூறினார்கள்.''

திரு. எல். கிருஷ்ணன் அவர்கள் தமது 68 ஆவது வயதிலும் சுறுசுறுப்பாக சென்னையில் உள்ள அவர்களது குடும்பத்துக்குச் சொந்தமான கிருஷ்ணன் சிட்பண்ட் லிட் நிறுவனத்தை இயக்குநராக இருந்து கவனித்து வருகிறார்கள்.

குடும்பம்

இவர்களது துணைவியார்



திரு. எல். கிருஷ்ணன் அவர்கள் மலேஷியா சென்று திரும்பிய போது பம்பாயில் நிகழ்ந்த பாராட்டு விழாவில் அவர்களுடன் அன்றைய மராட்டிய மாநில அமைச்சர் திரு. குந்தே, பேராசிரியர் திரு. கார்னிக்கா

திருமதி உமையாள் ஆச்சி அவர்கள் 1983ல் காலமாகிவிட்டார்கள். இவர்களுக்கு திரு. பழநியப்பா கிருஷ்ணன் திரு. முருகப்பா கிருஷ்ணன் என இரு புதல்வர்களும் லெட்சுமி என்ற பெண்ணும் உள்ளனர்.

திரு. பழநியப்பா கிருஷ்ணன் B Tech (Agri. Eng)ம் அமெரிக்காவில் ஹவாய்ப் பல்கலைக் கழகத்தில் M S. (Agri. Eng.)ம் படித்தவர். இல்லினுய்ஸ் பல்கலையில் Agri. Eng ல் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்று Delaware பல்கலையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருக்குத் திருமணம் நடைபெற்றுள்ளது. திரு. முருகப்பாகிருஷ்ணன் B. Com M. B. A. படித்தவர். அமெரிக்காவில் Management Scienceல் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்று purdue பல்கலையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். பெண் செல்வி லெட்சுமி கோவை பி. எஸ் ஜி. கல்லூரியில் M Sc (Applied Maths) கடைசி ஆண்டு பயின்று வருகிறார். விரைவில் அமெரிக்கா செல்ல இருக்கிறார். (திரு. முருகப்பா கிருஷ்ணனுக்கும் செல்வி லெட்சுமிக்கும் திருமணம் நடைபெற வேண்டும்)

வி. என். சிதம்பரம்

நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களைப் பற்றி அவர்கள் கூறியபோது ''உண்மையான நண்பர்களில் அவர்கள் சிறந்தவர்கள். என் மீது அவர்களுக்கு எப்போதும் மதிப்பும் மரியாதையும் உண்டு. செட்டி நாட்டில் உள்ள பெருந்தகையாளர்களில் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்'' எனக் கூறினர்கள்.

நகரத்தார் பெண்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட, வங்கித் துறையில் பல அரிய சாதனைகளை நிகழ்த்திய மாமனிதர் திரு. எல். கிருஷ்ணன் அவர்கள் ஆடம்பரமில்லாத எளிய வாழ்க்கையை அமைதியோடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேர்முகம்: எல். சுந்தரம்

மொரீஷியசில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு

மொரீஷியஸ் தீவில் ஏழாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை அந்நாட்டு அரசு 1-12-89 முதல் 8-12-89 வரை சிறப்பாக நடத்தியது. 4-12-89 முதல் 7-12-89 வரை கருத்தரங்குகள் நடந்தன. 22 நாடுகளிலிருந்து 200 பேராளர்கள் கலந்து கொண்ட இம் மாநாட்டை அத்தீவிலுள்ள ஒரு இலட்சம் தமிழ் மக்களும் மற்றும் பிற இனத்தவரும் ஒரு தேசிய விழாவாகவே கொண்டாடினர்.

இம்மாநாட்டுக் கருத்தரங்கிற்குத் தமிழக அரசு அனுப்பிய தமிழறிஞர் குழுவில் முனைவர் தமிழண்ணல் அவர்கள் கலந்து கொண்டு 'சங்க இலக்கியம்' பற்றிக் கட்டுரை படித்தளித்தார்; ஓர் அமர்விற்குத் தலைமை தாங்கினார்; அந்நாட்டுத் தொலைக்காட்சி, வானொலிக்காக திரு. கதிர்வேலன் சொர்ணம் அவரைப் பேட்டிகண்டார். இதில் கலந்துகொண்டு விட்டு சிங்கப்பூர் வழியாக முனைவர் தமிழண்ணல் அவர்கள் 10-12-99 அன்று தாயகம் திரும்பினார்கள்.

தேவகோட்டை இந்தியன் வங்கியில் பணியாற்றும் திரு. கும. சண்முகசுந்தரமும் தனிப்பட்ட முறையில் கலந்து கொண்டு, ''வங்கிகளில் தமிழின் பயன்பாடு'' பற்றிக் கட்டுரை படித்தளித்தமை குறிப்பிடத்தக்கது. இவர் ஆறாம் மாநாட்டிற்காகக் கோலாலம்பூரிலும் கட்டுரை படித்தவர்.

மணிவண்ணன் மடல்..

1. யாருக்கு? ஏன்?

அன்பார்ந்த அண்ணனுக்கு,

ஆண்டு ஒன்று மலர்கிறது. உங்கள் முன் மடல் ஒன்று விரிகிறது. புத்தாண்டு வாழ்த்துக்கள். வீட்டில் எல்லோருக்கும் சொல்லுங்கள்.


இந்த வாழ்த்தைச் சொல்லும்போதே சிந்தனை எழுகிறது- ஒவ்வோர் ஆண்டிலும், பயன்படாத பழமையை ஒதுக்கி, புதுமையை வரவேற்றிருக்கிறோமா என்று.

காவிரி வெள்ளம் புது வளத்தைக் கொண்டு வருவது போல், கால வெள்ளம் புதுக் கருத்தை - புதிய வாழ்க்கை முறையைக் கொண்டு வருகிறது. இந்த வளம் சென்று சேராத நிலம் பாழாய்த்தான் கிடக்கும்.

தனி மனிதனோ, சமுதாயமோ, காலத்திற்கு ஏற்றபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாவிட்டால் வெற்றி இல்லை. பயன் இல்லை.

காலம் என்பது என்ன?

நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலை; அதை உருவாக்கும் சக்திகள். பருவத்தின் துணையால் தான் பயிர் வளர்கிறது. மண்வளம் எவ்வளவு இருந்தாலும், பருவத்தை மீறி வளர, பயிருக்குச் சக்தி இல்லை. அதுபோல பண்பு, திறமை எவ்வளவு இருந்தாலும், சூழ்நிலையை முழுவதுமாக வென்று வாழும் சக்தி மனிதர்களுக்கு இல்லை. சில பேர் விதிவிலக்கு! நிச்சயமாகச் சமூகம் விதிவிலக்கு அல்ல.



மணிவண்ணன் என்ற
முனைவர் சுப அண்ணாமலை

சூழ்நிலையை ஒப்புக் கொண்டு, அதற்குத் தக்கபடி வாழ்வு முறையை அமைத்துக் கொள்வது தான் புதுமையை வரவேற்றல்.

புதிதாகப் பார்க்கும், கேட்கும் எதையும் கண் மூடி ஏற்பது அல்ல இது. பயன் உள்ள பழமையை 'மூடத்தனம்' என்று

சொல்லி, நவநாகரிகமாக மாறி விடுவதும் அல்ல. அப்படிச் செய்வது சந்தர்ப்பவாதம். அதில் சுய நலம் இருக்கிறது.

நகரத்தார் சமூகம் பழமை வாய்ந்த சமூகம். ஆனால் அது பழைய சமூகமாகத் தேங்கிப் போய்விடக்கூடாது. புதுமை பெற்று வளர வேண்டும். இன்றைக்கு எதிரே நிற்கும் பிரச்னைகளை எதிர்கொண்டு, தாக்குப்பிடித்து, முன்னேற வேண்டும்.

இச்சமூகத்தில் வாழையடி வாழையாக வரும் பண்புகள், திறமைகள் பல இருக்கின்றன. இருந்து பயன் இல்லை. செயல் உருவம் பெற்று, கைக்கு மெய்யாகப் பயன்பட வேண்டும்.

இதற்கு என்ன செய்ய வேண்டும்? இன்றையசூழ்நிலை, தமிழ்ச் சமுதாயம், நமது நாடு, உலகம் என்ற ஒன்றுக்குள் ஒன்றான வட்டங்களில் - பின்னணியில் - நம்மை எடை போட்டுப் பார்க்க வேண்டும். 'எங்கேஇருக்கிறோம்' என்று உணர வேண்டும். இப்படி எடைபோட்ட பிறகு தான் நமது பாதையில் தடைகள் என்ன? நாமாக உண்டாக்கிய தடைகள் யாவை? மற்ற சக்திகள் உண்டாக்கியவை யாவை? நம் பலம் என்ன? பலவீனம் என்ன? என்றெல்லாம் தெரியும்.

பிறகு வளர்ச்சி வழிகளை, முன்னேற்ற ஏணியைச் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனைக்கு 1990 விரிகின்ற இந்நாளில் இந்த மடலை விரிக்கின்றேன். உங்கள் வீட்டில் ஒவ்வொருவருக்கும் எழுதப் போகிறேன்.

இது திறந்த மடல்; மனம் திறந்த மடல். எழுதுவது யாருக்-கோ, அவரை வைத்துச் சிந்தனை சுழலும். இது தனிக் கடிதம் அல்ல. எழுதப்படுபவரும் ஒரு கண்ணப்பனோ, ஒரு வள்ளியம்-மையோ அல்ல. நகரத்தார் பிரதிநிதி.

அண்ணன்! நீங்களும் எனக்கு எழுதலாம். ஆச்சி! நீங்களும் எழுதலாம்; உங்கள் பிரச்னைகளை மணிவண்ணன் ''நகரத்தார் குரல்'' என்ற முகவரிக்கு எழுதுங்கள். கட்டாயம் பதில் வரும், திறந்த மடலாக. உங்கள் பெயரை எழுதுங்கள். ஆனால் அதை நிச்சயம் சொல்லிவிட மாட்டேன்.

இது தேவையான - சுவையான கருத்துப் பரிமாறலாக இருக்கட்டும்.

அடுத்த மடலில் சந்திப்போம்.

உங்கள்

மணிவண்ணன்

இளைஞர்களின் வழிகாட்டி லேனாவுடன் ஒரு பேட்டி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

''நீங்கள் சென்று வந்த வெளிநாடுகளில் உங்கள் மனம் கவர்ந்த நாடு, அல்லது நாடுகள் எவை? அதற்குக் காரணம் என்ன?''

''நான் பார்த்த நாடுகளின் பட்டியல் நீளமானது. நிறைய நாடுகளில் பயணம் செய்திருக்கிறேன். முதல்லே நான் கிழக்கே போகிறவரைக்கும் சுவிட்சர்லாந்துதான் அருமையான நாடுன்னு எண்ணியிருந்தேன். இயந்திரங்களின் வளர்ச்சி தொழில் வளர்ச்சியை விட இயற்கை அழகை ரொம்ப ரசிக்கிறவன் நான். எனவே இயற்கை அழகு மிக்க அந்த நாட்டைத்தான் சிறந்த நாடாகக் கருதியிருந்தேன். ஆனால் கிழக்கே ஜப்பானுக்கெல்லாம் போன பிறகு அவர்களுடைய உழைப்பு, அவர்கள் பழகுகிற விதம், மனிதாபிமானம் எல்லாம் என்னைக் கவர்ந்தன. மொழி தெரியாமல் கூட அன்பு செலுத்த முடியும்கிறதுக்கு உதாரணம் காட்டியவர்கள் ஜப்பானியர்கள். அதனாலே ரொம்பவும் பிடித்த நாடா அப்புறம் ஜப்பானை மாத்திக்கிட்டேன். எனக்கு வாய்ப்புக் கிடைத்தா அடிக்கடி ஜப்பான் போய்வர ஆர்வமாஇருக்கு.''

வெளிநாடுகளைப் பற்றிய நூல்கள்

''வெளி நாடுகளைப் பற்றி நீங்கள் எழுதியுள்ள நூல்களைக் குறிப்பிடலாமா...?''

''கீழை நாட்டுப் பயண அனுபவங்கள்னு ஒரு நூலும், மேலைநாட்டுப் பயண அனுபவங்கள்னு ஒரு நூலுமான என் பயண அனுபவங்களையெல்லாம் ஒன்று திரட்டி இரண்டு நூல் மட்டும் எழுதியிருக்கிறேன். என்னுடைய மலேஷியப் பயணம், சிங்கப்பூர்ப் பயணம், இலங்கைப் பயணத்தைப் பற்றித் தனித் தனியா சிறு நூல்களா வெளியிடலாம்னு ஓர் எண்ணம் இருக்கு. அந்த நாடுகளுக்குச் செல்கிறவர்களுக்கு அவை வழிகாட்டியா, உதவியா இருக்குங்குற அபிப்பிராயத்துலே அவற்றை வெளியிட இருக்கிறேன்.''

திரை உலகம்

''திரை உலகம் பற்றிய தங்கள் கருத்து என்ன? தங்களது தந்தையைப்போல் திரைப்படம் தயாரிக்கும் எண்ணம் எதுவும் உண்டா?''

''திரை உலகம் ஒரு மோசமான கனவுலகத் தொழிற்சாலைங்கிறது என்னுடைய அபிப்பிராயம். என் தந்தை படம் எடுத்த காலத்திலேயே 'நீங்க திரை உலகைக் கடுமையாத் தாக்கிவிட்டு அதிலே ஈடுபடுவது சரி இல்லை'ன்னு இளம் வயதிலேயே சொன்னவன் நான். என் தந்தையின் மறைவுக்குப் பின்னர் அவர்கள் சம்பந்தப்பட்ட படச்சுருள் பெட்டிகள் எல்லாவற்றையும் ஒரு ஆளைக் கூப்பிட்டு '99 வருஷ லீசுக்கு அள்ளிக்கிட்டுப் போயிடுங்க'ன்னு சொல்லி அன்னிக்கே அவை எல்லாவற்றையும் தலை முழுகியாச்சு அந்த அளவுக்குத்தான் என் திரை உலக ஈடுபாடு.

''அப்புறம் நடிகை ஸ்ரீபிரியாவின் தந்தை திரு. பக்கிரி

சாமிப் பிள்ளை ஒரு திரைப்படம் தயாரிக்கப்போவதாகவும் அதற்கு நான் கதை, வசனம் எழுதிக்கொடுக்க வேண்டு மென்றும் சொல்லி ஒரு வாய்ப்புக் கொடுத்தார். அதை நான் இதமாக மறுத்துவிட்டேன் 'எனக்குத் திரைத் துறையில் ஈடுபாடு இல்லை. பத்திரிகைத் துறையில் என் தந்தை விட்டுச் சென்ற பெரிய இடைவெளியை நிரப்புவதற்குத் தான் நான் பொது வாழ்க்கைக்கு வந்தேன். அதைத்தான நான் செய்ய இருக்கிறேன. திரை உலகத் தொடர்பு எனக்கு வேண்டாம்'னு மறுத்துச் சொன்னேன். அதற்குப் பிறகு 1987 இல் இயக்குநர் பாரதிராஜா ஏவி. எம். - ராஜேஸ்வரி மண்டபத்தில் நடந்த ஒரு கூட்டத்தில், மேடையிலேயே பகிரங்கமாக 'லேனா நடிக்க விரும்பினா நான் வாய்ப்புத் தர்றேன்'னு அறிவிச்சாரு. நான் பதிலே சொல்லலை. இப்படி, வாய்ப்புகள் வலிய வந்து வீட்டுக் கதவைத் தட்டிய போதுகூட சபலமே இல்லாமே இந்நேரம் வரைக்கும் அதிலே உறுதியாய் இருக்கேன்.''

பதிப்பகங்கள்

''தமிழ் நாட்டில் பதிப்பகங்கள் இப்போது எப்படி இருக்கின்றன?''

''நகரத்தார்கள் ரொம்பவும் பெருமைப்பட வேண்டிய நிலைமையில் பதிப்பங்கள் உள்ளன. 1940ல் திரு. சின்ன அண்ணாமலை அவர்கள் சென்னை வந்து உஸ்மான் ரோடில் திராவிடப் பண்ணை, தமிழ்ப் பண்ணை என இரு அமைப்புகளைத் தொடங்கினார்கள். அதில் பயின்ற பல மாணவர்கள் தாம் இன்றைக்குப் பெரிய பதிப்பாளர்களாக இருக்கிறார்கள். நாம் பெருமைப்படக் கூடிய அளவு 60 சதவிகித பதிப்பகங்கள் நகரத்தார் வசம் உள்ளன. முன்னணிப் பதிப்பாளர்கள் பெரும்பாலும் நகரத்தார்களாக இருக்கிறார்கள். முன்பு 1200 பிரதிகள் வெளியிட்டால் அதில் 600 பிரதிகளைத் தான் அரசு வாங்கிக் கொள்ளும். இப்போது கரும்பலகைத் திட்டம், வயது வந்தோர் கல்வித் திட்டம், போன்ற கல்வித் திட்டங்களினால் மத்திய அரசும் சரி, தமிழக அரசும் சரி 6000 பிரதிகள், 10,000 பிரதிகள் என்று வாங்கிக் கொள்ளக்கூடிய மிக ஆரோக்கியமான சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. அதனால் மிகக் குறைந்த அளவில் இருந்த பதிப்பகங்கள் இன்று 400, 450 என்ற அளவில் வளர்ந்துள்ளன. பதிப்பாளர்கள் மிக வளமாகவும் நலமாகவும் ரொம்ப மகிழ்ச்சியாகவும் இருக்கின்ற அளவுக்கு இன்றைக்குப் பதிப்பகங்கள் மிக ஆரோக்கியமான நிலைமையில் உள்ளன. நல்ல எதிர்காலமும் இருக்கிறது.''

மதிக்கும் நபர்கள்

''நீங்கள் பெரிதும் மதிக்கும் நபர்கள் யார்?''

''நான் எல்லோரையும் மதிக்கிறவன். ஆனால் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் என் தாய் திருமதி மணிமேகலை ஆச்சியையும் ''குமுதம்'' ஆசிரியர் திரு. எஸ். ஏ. பி. அண்ணாமலை அவர்களையும் சொல்லலாம்.''

நகரத்தார் குரல்


''நகரத்தார் குரல்'' பற்றித் தங்கள் கருத்து என்ன? குறைகள் இருக்குமானால் தயங்காமல் சொல்லுங்கள் . .?''

''நகரத்தார் குர'லைப் பொறுத்தளவில் குறைகள்னு என்னுலே எதையுமே சுட்டிக் காட்டும்படியா இல்லே நிறைகள்னு பார்த்தம்னு அதிகமான படங்களோட.. மிகச் சிறந்த முறையிலே அச்சிட்டு, படிக்க நல்ல தூண்டுதலாகவும் வந்து கொண்டிருப்பது குறித்து ரொம்ப மகிழ்ச்சி பொது வாகவே, நகரத்தார் சமூகப் பத்திரிகைகள் எத்தனே வந்தா லும் வரவேற்கக்கூடியவன் நான். நம் சமுதாயத்திலே ஓர் இணைப்புப் பாலமா இன்றைக்கு இருக்கிறதே இந்தப் பத்திரி கைகள்தான் செட்டிநாட்டுப் பெருமக்கள் எல்லாம் தொழில் காரணமா வெவ்வேறு மூலேகளுக்கு - அமெரிக்கா விலிருந்து இந்தப் பக்கம் கிழக்காசியநாடுகள் வரை - ஏன்- வடக்கேயும் - பிரிந்துபோய் வெவ்வேறு இடங்களிலே இருக் கிறுர்கள். அவர்களே இணைக்கிற ஒரு வலிமையான சாதனமா இந்த இதழ் இருக்கு நான் தவருமல் படிக்கிற பத்திரிகைகளில் 'நகரத்தார் குர'லும் ஒன்று. தபாலில் வந்ததுமே கையோடு பிரிச்சுப் படித்துவிடுவேன். இப்படி அப்படி வச்சுப் படிக்கிறதில்லே. அப்பவே படிக்கணும் எனக்கு. மிக இளவயதிலேயே சென்னைக்கு வந்தவன் நான். நம் சமூகப் பழக்கவழக்கங்களும் நம்மவர்களேப் பற்றியும் அதி கம் தெரியாத எனக்கு 'நகரத்தார் குரல்' பல வகைகளில் பயனுள்ளதாக இருக்கிறது''

நிறைவேருத ஆசை

''உங்களுக்கு நிறைவேருத ஆசை எதுவும் உண்டா?''

''நான் படிக்கிற காலத்திலே என் தந்தையிடம் என் னைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை நான் ஏற்படுத்தலே. நான் விளையாட்டுப் போக்காக நண்பர்களுடன் சேர்ந்து சுற்றித் திரிந்தும் சரிவரப் படிக்காமலும் சினிப் பார்த்துக் கொண்டும் தவறு செய்து கொண்டிருந்தேன். நான் ஒரு மனுஷனு நாலுபேர் அங்கீகரிக்கிறமாதிரி வளர்ச்சி அடை வேன்னு அவங்க எதிர்பார்க்கலே. இன்றைக்குப் பத்திரி கைத் துறையிலே.. பதிப்புத் துறையிலே.. ஒரு சிறு உய



திரு. லேனு தமிழ்வாணன்

ரத்தை நான் எட்டி இருப்பதை அவுங்க இருந்து பார்த்திருந் தாங்கன்னு ரொம்பவும் சந்தோஷப்பட்டிருப்பாங்க. என் தம்பி ரவி தமிழ்வாணனிடம் நல்ல அபிப்பிராயம் கொண்ட அவர்கள் 'எனக்குப் பெரிய மகனைப் பற்றித்தான் கவலையாய் இருக்கு.. கவலையாய் இருக்கு..'.னு தன் நண்பர்களிடத் தில் சொல்லிக்கிட்டே இருப்பாங்க. 'அவுங்க ஓய்வா ஈஸி சேரிலிருந்து நான் செய்துவருகிற நல்ல செயல்களையெல்லாம் பார்த்துப் பெருமை கொள்ளமுடியாமல் போய்விட்டதே' என்கிற ஒன்றுதான் என்னுடைய நிறைவேறாத ஆசைகளில் தலையாயது.''

மனம் கவர்ந்த நூல்கள்

''உங்கள் மனம் கவர்ந்த தமிழ் நூல்கள் எவை? ஆங்கில நூல்கள் எவை?''

''தமிழைப் பொறுத்தவரை - நான் தற்பெருமையாப் பேசுறதா நீங்க நினைக்கலேன்னு - என் தந்தையார் எழுதிய நூல்கள் தான் எனக்குப் பிடித்தவை. ரொம்ப எளிமையான தமிழிலே, நல்ல தமிழ்ச் சொற்களைப் போட்டு - சுருக்கமான வாக்கியங்களிலே சொல்ல வந்த விஷயங்களைத் தெளிவாச் சொல்லுவாங்க. தன்னுடைய மேதாவித்தனத்தைக் கருத் திலேதான் காண்பிப்பாங்களே தவிர, சொற்களிலே காண் பித்துப் புரியவிடாமே பண்ணிடமாட்டாங்க. நான் முதன் முதலிலே அரிஓம்னு படிச்சது என் தந்தையாரின் நூல்கள் தான். ஆங்கில நூல்களைப் பொறுத்தவரை அமெரிக்கக் கிறிஸ்தவ பாதிரியார் நார்மன் வின்செண்ட்பேல் எழுதிய **Positive Thinking, Tough Minded Optimist** போன்ற அவர் எழுதிய வாழ்க்கை முன்னேற்றத்திற்கான நூல்கள் எனக்குப் பிடித்தவை. அவைகளிலே நடைமுறை வாழ்க்கைக்குப் பயனுள்ள விஷயங்கள் நிறைய இருக்கு. இலக்கிய ரசனைகளை விட மருத்துவ நூல்களைவிட, மற்ற நூல்களைவிட உளவியல் சம்பந்தப்பட்ட நூல்களில் நான் ரொம்ப ஈடுபாடா இருக் கேன். என்கிட்டே அதைப்பற்றிப் பெரிய கலெக்ஷனே இருக்கு.''

திரு. லேனா தமிழ்வாணன் இளைஞர்; ஆனால் பழுத்த அனுபவசாலி போல் பேசுகிறார். தன் பெற்றோருக்கும் தன் முதலாளி ''குமுதம்'' ஆசிரியர் திரு எஸ். ஏ பி. அண்ணா மலை அவர்களுக்கும் அதிக மரியாதை கொடுக்கிறார். மனம் போன போக்கில் செயல்படாமல் மனத்தை ஒரு கட்டுக்குள் வைத்துக் கொண்டு பகுத்தறிந்து செயல்படுகிறார்.

''கல்கண்டு'' இதழில் இவரது தந்தையார் முப்பது ஆண்டுகளில் செய்துள்ள சாதனையை இவர் பனிரெண்டே ஆண்டுகளில் செய்துள்ளார் எனலாம்.

இவருக்குத் தாயாரும் (திருமதி மணிமேகலை ஆச்சி) மனைவி திருமதி ஜெயமும், இரு பிள்ளைகளும் (எல். ராம நாதன், எல். பிச்சப்பா சுப்பிரமணியன்) அன்புக்குரிய தம்பி திரு. ரவி தமிழ்வாணன் குடும்பத்தினரும் உள்ளனர்.

நேர்முகத்தை முடித்துக் கொண்டு விடைபெற்ற போது ஒரு நல்ல நண்பரை, ஒரு சிறந்த பத்திரிகையாளரை, நல்லிதயம் கொண்ட ஒரு அன்பரைச் சந்தித்த மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்பட்டது.

நேர்முகம்: எல். சுந்தரம்

'நானும் ஒரு நகரத்தார்...'

தமிழண்ணல்

எனக்குப் பிரிவு தெரிந்த காலம்; தமிழகத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சும் எழுத்தும் சூறாவளிபோல் நாடெங்கும் சுழன்று, சிந்தனைகள் தூண்டிவிடப்பட்டுக் கொண்டிருந்தன. பழமைக் 'குப்பை'கள் சிந்திச் சிதறிப் பறந்து கொண்டிருந்தன. இதனால் கவரப்பட்ட என் மனம் நகரத்தார் என்ற சாதி, சமூக மரபுக்குள் கட்டுப்பட மறுத்தது. அதனால் 'தமிழன்' என்ற இனவுணர்வில் தோய்ந்து என் மனம் வளரலாயிற்று. இந்நிலை நெடுங்காலம் நீடித்தது. எதுவரை? யான் தமிழாசிரியனாகிப் பல ஆண்டுகள் கடக்கும் வரை.

இப்போதும் தமிழன் என்ற இனவுணர்வில் யான் சிறிதும் தளர்ந்துவிடவில்லை. ஆனால் 'நானும் ஒரு நகரத்தார்..' என்ற சமுகவுணர்வுடன், 'நானொரு தமிழன் எனதொரு மொழியும், தேனென இனிக்கும் செந்தமிழ் மொழியே என்று என்மனம் சிந்துபாடுகிறது. இவை இரண்டும் இன்று முரண்பட்டனவாகத் தோன்றாமல், இணைவுற்றனவாகத் தோன்றுகின்றன. பலகுரலிசையில் பாடும்போது, அதில் கேட்கும் தனித்தனிக் குரல்கள் அக்குழு இசையுடன் முரண்பட்டனவாகுமா? அவை அனைத்தும் சேர்ந்து இசைப்பதிலே தான் குழு இசையாலாகும் இன்பமே அமைகிறது. அவ்வாறு தான் இன்றைய நிலையில் - இக்காலச் சூழலில் - சுற்றியுள்ள அரசியல் பின்னணியில்-குடியாட்சியமைப்பில் 'நானும் ஒரு நகரத்தார்...' என்ற சமுக உணர்வை நம்மில் ஒவ்வொருவரும் விட்டுவிடக் கூடாது என்றும் தோற்றுகிறது.



முனைவர் திரு. தமிழண்ணல்

எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டது? 'நகரத்தார்' எனத் தன்னை எண்ணிக் கொள்ளவும் மறுத்தமனம், இப்போது தம்மை அவ்வாறு எண்ணிக் கொள்ளாதவர்களைப் பார்த்து, 'எப்போது இவர்களுக்குச் சமுக உணர்வு' ஏற்படும் என்று ஏன் ஏங்குகிறது? 'நகரத்தார்' என நம்மை நாமே எண்ணிக் கொள்வது சிறுமையா? அன்றிப் பெரு

மையா?

சிலசமயங்களில் யான் நகரத்தார் சங்கக் கூட்டங்களில் பேசும் போது ''உலகம் பெரிதாக மதிக்கும்போது நாம் இத்தகைய சமுகத்தில் பிறந்ததற்காகப் பெருமகிழ்ச்சியடையலாம் என எண்ணி இறுமாந்ததுண்டு. அதே சமயம் என் குடும்பச் சூழல், பெண்களின் திருமணம், பேரம் பேசும் சமுகம் பற்றி நினைக்கும் போது, 'சே, இந்தச் சமுகத்தில் போய் இருந்திருந்து பிறந்தோ-மே' என்றுவருந்தியிருக்கிறேன்'' எனக் கூறுவதுண்டு. அவ்வாறாஞல் நாம்அனைவரும் நகரத்தார் எனக் கூறிக் கொள்வதில் பெருமையடைவதா? அல்லது அவ்வாறு கூறிக்கொள்ளும் மனவுணர்வையே மாற்றிக் கொள்ள வேண்டுமா?

இத்தகைய நீண்ட காலச் சிந்தனைகளில் எழுந்த சிலசில சிதறல்களைத்தான், யான் இக் கட்டுரைத் தொடரில் உங்களனைவருடனும் பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

இக் கட்டுரைத் தொடர், பலப்பல சிந்தனைகளின் தொகுப்பாகத்தான் இருக்கும். அடியும் முடியும் யாவை எனக் கொண்டு கூட்ட முடியாது. ஆனாலும் சுவையாக இருக்கும்; சிலபோது சூடாகவும் இருக்கும். யார்மீதும் எனக்குக் கோபதாபம் இல்லை. மணிவிழாக் கண்டுவிட்ட எனக்கு இனிச் சமுக எதிர்பார்ப்புகளும் குறைவு; விருப்பு வெறுப்புகளுக்கும் அதிக இடமில்லை. எனவே மனந்திறந்து பேசலாம் என்ற நினைப்புடன்தான் யான் இத்தகைய தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். ஏதோ ஒரு திருமண வீட்டில், எதிர்பாராமல் சந்தித்துக் கொண்டதும் ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்கள் கூட, தம் குடும்ப பொது 'விஷயங்களை' ஒரு சிறிது நேரம், கூட்டத்தைவிட்டு ஒதுங்கிநின்று, தங்களுக்குள் மனம் விட்டுப் பேசிக் கொள்கிறார்கள் அல்ல-வா? அது போலத்தான் இதுவும் அமைகிறது. இதைப் படிக்கும் நீங்கள்தான் சற்றுநேரம் ஒதுக்கி, இந்த ஆரவார உலகை விட்டு விலகி, என் பக்கத்தில் வந்து எனக்குச் செவி சாய்க்கவேண்டும்.

உங்களுக்கும் எவ்வளவோ அலுவல்கள்! தம்பி திருமணம் முடிந்ததும் முடியாததுமாக அண்ணன் கோவைக்குத் தொழிலைக் கவனிக்க ஓடுகிறானே! நாட்டுநிலை அவ்வாறாகி விட்ட-தே! அதனால் நான் நெடுநேரம் பேசி, உங்கள் நேரத்தை வீணடிக்க மாட்டேன்! எனக்குத் தெரியும் உங்கள் அவசரம்! என் நிலைமை கூட அப்படித்தான்! **'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'** என்ற திருமூலர் வாக்குக்குப் பிறப்பெடுத்தவர்களில் யானும் ஒருவன். என் இறுதி மூச்சுவரை செய்ய வேண்டிய பணிகள் இப்போதே நிரம்பிக் கிடக்கின்றன. அதற்காக நானும் நீங்களும் நாம் பிறந்த சமுகவுணர்வை, ஒரு சிறிது நேரமேனும் பகிர்ந்து கொள்ளலாகாதா? நாமென்ன அவ்வளவு மேதைகளா? அடிமரமில்லாத கிளைகளா?

பேச்சு வாக்கில் எனது சுய வரலாறு, சுயசிந்தனைகள்தான் சான்றாதாரங்களாக அடிக்கடி, திரும்பத் திரும்ப வரும், அறுபது வயது நிறைந்த அனுபவ வாழ்வு, மற்றவருக்கும் பயன்படக் கூடும் தானே? அதை நீங்கள் பொறுத்துக் கொண்டு, யாரோ ஒரு 'க' வின் வரலாறு என நினைத்துக் கொண்டு, சற்றே செவிமடுங்கள்! அது போதும் எனக்கு!

அன்று ஒரு நாள் சிங்கப்பூரில்

யான், என்னுடன் பணியாற்றும் ஒரு பேராசிரியர், சிங்கப்பூரிலுள்ள நம் சமுகப் பெரியவர் மூவரும் சிரங்கூன் தெருவிலுள்ள கலியாண சுந்தரம் கடைக்குப் போனோம். யான் 70 1/2 வெள்ளிக்கு ஏதோ வாங்கினேன்; என்னிடம் 66 சிங்கப்பூர் வெள்ளிகள் தான் அப்போது இருந்தன. செட்டியார் தம் பையிலிருந்து 4 வெள்ளி கொடுத்தார். நான் 50 சதம் இருப்பதாகப் பையில் தேடினேன்; 10 சதம் தான் அகப்பட்டது. பிறகு அவரே அதையும் கொடுத்தார். நீண்ட நேரம் கழித்து என்னிடமிருந்த அமெரிக்க டாலரை மாற்றிய பின் அவரிடம் 4 வெள்ளியைத் தந்தேன். அந்த 1/2 வெள்ளியை அவரும் மறந்து விட்டார்; நானும் மறந்துவிட்டேன். 'பிறகு என்ன ஆயிற்று?' என்றா கேட்கிறீர்கள். சற்றுப் பொறுங்கள்; தண்ணீர் குடித்துவிட்டுச் சொல்கிறேன்.

(அடுத்த திங்கள் வரும்)

ஏஎல். எஸ். கண்ணப்பனுடன் ஒரு சந்திப்பு

கவியரசு கண்ணதாசனின் அண்ணன் திரு. ஏஎல். சீனிவாசன் எழுத்தாளராக ஆகவேண்டும் என்ற ஆர்வத்தில் சிறுகூடல் பட்டியிலிருந்து சென்னை சென்றவர். அங்கு திரை உலகில் படத் தயாரிப்பாளர் ஆகி, புகழ் பெற்றவர்.

திரு. ஏஎல். சீனிவாசன் முதலில் ஜூபிடர் பிக்சர்ஸுடன் சேர்ந்து ''கன்னியின் காதலி'' படத்தையும் அடுத்து மெட்ராஸ் ஃபிலிம் சர்க்யூட் என்ற பெயரில் சிவாஜி கணேசன் நடித்த ''பணம்'' படத்தையும் தயாரித்தார். அடுத்து ஏ எல். எஸ். புரொடக்ஷன்ஸ் மூலம் முதல் தேதி, சபாஷ்மீனு, சக்கரவர்த்தித் திருமகள், திருடாதே, மணியோசை, அம்பிகாபதி, கந்தன்கருணை, நீலகிரி எக்ஸ்பிரஸ், ஆனந்தி, சாந்தி போன்ற பல படங்களைத் தயாரித்து வெளியிட்டார்.


Negative Rights வாங்கும் ஒரு முறையை ஏற்படுத்தியவர் இவர். தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையில் 13 ஆண்டுகள் தலைவராகவும் இந்தியத் திரைப் பட ஏற்றுமதிக் கழகம், தமிழ் நாடு திரையரங்கு கழகம் ஆகியவற்றில் இயக்குநராகவும் இருந்து அரும்பணியாற்றியவர். அகில இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தில் தலைவராகச் சேவை புரிந்தவர்.

இத்தனை பெருமைக்கும் உரிய திரு. ஏஎல். எஸ். அவர்களின் புதல்வர் திரு. ஏஎல். எஸ். கண்ணப்பனை அண்மையில் சென்னையில் சந்தித்தேன்....

''உங்கள் தந்தைக்குப் பிறகு உங்களது திரை உலகப்பணி எவ்வாறு உள்ளது?''

''நான் ஏஎல். எஸ். என்டர்பிரைசஸ் சார்பில் ''கரைகள் கற்பனை'' என்ற படத்திற்குத் திரைக் கதை எழுதி, டைரக்ட் செய்து, தயாரித்து 1981ல் வெளியிட்டேன். இப்படம் இந்தியத் திரைப்பட விழாவில் திரையிடத் தேர்வு செய்யப் பெற்ற 10 படங்களில் ஒன்று.

'' இப்போது ஏ எல். எஸ். புரொடக்ஷன்ஸ் சார்பில் 'எல்லாம் ஐயப்பன்' என்ற சமூகப் படத்தைத் தயாரித்து வருகிறேன். பாடல்களை நானும், வள்ளியம்மை கண்ணதாசனும், T. ராஜேந்தரும் எழுதியிருக்கிறோம். கதை, வசனம், டைரக்ஷன் - தசரதன். இசை - ஜேசுதாஸ். இப் படத்தில் என் சித்தப்பா கண்ணதாசனின் மகள் விசாலாட்சி ஒரு பாடல் காட்சியில் ஐயப்பனாக நடித்துள்ளார்.



நடிகை ஜெயலலிதாவின் 100 ஆவது பட விழாவில் கலைஞர் திரு. மு. கருணாநிதி, திரு. ஏஎல். சீனிவாசன், அன்றைய நடிகையும் இன்றைய அரசியல்வாதியுமான செல்வி ஜெயலலிதா.

''மற்றபடி ஏஎல். எஸ். புரொடக்ஷன்ஸின் பழைய படங்களையும் இந்திப் படங்களையும் விநியோகம் செய்து வருகிறேன். ஏஎல். எஸ். வெளிப்புறப் படப்பிடிப்பு யூனிட் மூலம் தமிழ், தெலுங்கு, மலையாளம் என 100 படங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளோம். பணியாற்றி வருகிறோம்.''

''உங்கள் தந்தை, சிறிய தந்தை (கவியரசர்) நினைவாக ஏதேனும் செய்யும் திட்டம் உண்டா?''

''கவியரசர் நினைவாக சிறுகூடல்பட்டியில் நினைவுச் சின்னம் ஒன்று ஏற்படுத்த எண்ணம் உள்ளது. அதில் ஒரு நூலகம் ஏற்படுத்தி கவியரசர் எழுதி வெளியிட்டுள்ள நூல்களையும் அவரது பேச்சுக்கள் அடங்கிய நாடாக்களையும் பார்வைக்கு வைக்க விருப்பம் உள்ளது.''

திரு. ஏஎல். எஸ். கண்ணப்பன் சென்னை லயோலாக் கல்லூரியில் B. Com. படித்தவர். இவர் ஜெயந்தி என்ற பெண்ணை (I.A.S. அதிகாரி ஒருவரின் புதல்வி)க் காதலித்துக் கலப்பு மணம் செய்து கொண்டவர். மூன்று பெண்களுக்குத் தந்தை. இவர் தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்திலும் தென்னிந்தித் திரைப்படத் தொழிலதிபர்கள் சங்கத்திலும் செயலாளர். இவருக்கு செல்வி லலிதா என்ற தமக்கையார் உண்டு. இவரது தந்தையார் திரு. ஏஎல். எஸ். 30-7-1977லும் தாயார் திருமதி அழகம்மை ஆச்சி 21-5-1981லும் காலமாகிவிட்டார்கள்.

சந்திப்பு: எல். சுந்தரம்

இளம் வயதில் ஆடிட்டரான எம். சுப்பையா

திரு. எம். சுப்பையா ஆத்திக்காடு தெக்கூரில் பிறந்தவர். மாத்தூர்க் கோயில் அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் திரு. பழ. அரு. மாணிக்கம் செட்டியார்; தாயார் திருமதி கோதை ஆச்சி.

திரு. எம். சுப்பையா பள்ளிக் கல்வியை ஆ. தெக்கூர் ஸ்ரீ விசாலாட்சி கலாசாலையிலும் மதுரை செயின்ட் மேரீஸ் பள்ளியிலும் கற்றார். புகுமுகக் கல்வியை மதுரை தியாகராசர் கல்லூரியிலும் B. Com.ஐ மதுரைக் கல்லூரியிலும் கற்று 1966ல் பட்டதாரி ஆனார்.

ஆடிட்டர் பெரி. தியாகராஜ் அவர்களிடம் ஆடிட்டருக்குப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த போதே- பயிற்சி முடியும் முன்பே - 1970ல் C. A தேர்ச்சி பெற்றார். தமது 22 ஆவது வயதில் இவர் C. A. தேர்ச்சி பெற்றது வணிகவியல் துறையில் இவர் புலி என்பதை எடுத்துக் காட்டுகிறது.

திரு. சுப்பையா அன்பானவர்; சுறுசுறுப்பானவர். நகரத்தார் இனத்தின் மீது பற்றும் பாசமும் கொண்டவர். இவரது பேச்சு காட்டாறு போல் வேகமாக இருக்கும்.

''உங்களைப் பேட்டி காண வேண்டும்.. எப்பொழுது வரலாம்?'' என்று தொலைபேசியில் கேட்டபோது சாக்குப் போக்குச் சொல்லாமல் நாள், நேரம் குறிப்பிட்டு வரச்சொல்லி அன்று தன்னுடைய வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அவர் ஆர்வத்துடனும் பாசத்துடனும் பேட்டியளித்தார்.

பேட்டியைத் தொடருங்கள்...

''ஆடிட் தொழிலை நீங்கள் எப்போது முதல் செய்து வருகிறீர்கள்?''

''1970 முதல் செய்து வருகிறேன். இது இருபதாவது ஆண்டாகும்.''

''நல்லது. A.C.A,, C.A, F.C.A. இவைகளுக்கு விளக்கம் தரலாமா?''

''A.C.A. என்பது Associate of the Institute of Chartered Accountant. C.A. என்பது Chartered Accountant, F.C.A. என்பது Fellow of the Institute of Chartered Accountant. இவைகளெல்லாம் டிப்ளமர்க்கள். புது டில்லியில் உள்ள Institute of Chartered Accountants of India



நிறுவனம் இவற்றை வழங்குகிறது. ஆடிட்டர் தேர்வில் தேர்ச்சி பெற்றவுடன் A.C.A. வழங்குகிறார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு F.C.A வழங்குகிறார்கள்''

''பட்டதாரி அல்லாதவர் ஆடிட்டருக்குப் பயிற்சி பெற்று ஆடிட்டராக ஆக முடியுமா?''

''முடியும். +2 க்குப் பிறகு Preliminary Exam. எழுதித் தேர்ச்சி பெற்றால் ஆடிட்டருக்

குப் பயிற்சி பெற்று ஆடிட்ட ராகலாம்...''

''ஆடிட்டருக்குப் படிக்க அஞ்சுபவர்களுக்குத் தங்கள் யோசனை என்ன?''

''கணக்குத்துறை என்பது நம் சமூகத்திற்குப் புதிதல்ல. நம் ரத்தத்தில் ஊறிப் போனது அது. C A. படிப்பது ஒன்றும் கஷ்டமில்லை. முயன்று படித்தால் முதல் முயற்சியிலேயே வெற்றிக் கனியைப் பெறலாம். நகரத்தார் இளைஞர்கள் ஆடிட்டருக்குப் படிக்க, பயிற்சி பெற பயந்து விலகிப்போக வேண்டாம். ஆடிட் தொடர்பான கேள்விகளுக்கும் விளக்கங்களுக்கும் என்னை அணுகினால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்''

42 வயதாகும் திரு. எம். சுப்பையா ஆடிட் தொழிலை மிக ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் செய்து வருகிறார். இவரிடம் இதுவரை 50 பேர் ஆடிட் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். 10 பேர் இன்று பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இவர் 10க்கும் மேற்பட்ட லிமிடெட் நிறுவனங்களின் கோப்புகளையும் வருமான வரி கட்டக் கூடிய அதிகமான கோப்புகளையும் ஓய்வின்றிக் கவனித்து வருகிறார்.

மதுரை நகர அரிமா சங்கத்தின் உறுப்பினராகப் பல ஆண்டுகளும் 1981-82ல் அதன் செயலாளராகவும் சேவை செய்த இவர், வெள்ளி விழா ஆண்டான இப்போது அதன் தலைவராகப் பொறுப்பேற்று பல தொண்டுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார். 8-10-89 அன்று 20 அரிமா உறுப்பினர்களின் உதவியுடன் இரத்த தான முகாமை நடத்தினார். 5-11-89 அன்று டாக்டர் திரு. என். என். கண்ணப்பன் தலைமையில் 20 டாக்டர்களின் உதவியுடன் திருமோகூரில் இலவச மருத்துவ முகாமை நடத்தி 1000 பேருக்கு இலவச மருந்து சிகிச்சை அன்னதானம் கிடைக்கச் செய்தார். அரிமா சங்கத்தின் மூலம் இலவச கண் சிகிச்சை முகாமும் இலவசத் தோல் சிகிச்சை முகாமும் நடத்த விருப்பம் கொண்டுள்ளார்.

திருமோகூரில் ரூ. 10 ஆயிரம் செலவில் இவரும் பூலாங்குறிச்சி திரு. வி. முத்தையாவும் சேர்ந்து பேருந்து நிழற்குடை (Bus Shelter) ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

திரு. எம். சுப்பையாவுக்கு திரு. எம். காந்தி B. E. என்கிற அண்ணனும் திரு. எம். ஆறுமுகம் M. Sc. திரு. எம். சொக்கலிங்கம் B. E. என்கிற இரு தம்பிகளும் உள்ளனர். இவரது துணைவியார் திருமதி சுப. சரோஜா ஆச்சி நெற்குப்பை முத்து க. லெ. மு. சிங்காரம் செட்டியார் அவர்களின் புதல்வியாவார். இவர்களுக்கு காந்திமதி, கோதை என இரு புதல்விகளும் சுப்பிரமணியன் என்கிற புதல்வனும் உள்ளனர். அனைவரும் கல்வி கற்று வருகின்றனர்.

பெருமைக்குரிய திரு. எம். சுப்பையா மேலும் புகழ்பெற வாழ்த்துவோம்.

சந்திப்பு : எல். சுந்தரம்.



காரைக்குடி ஏரோப்ளேன் ஆவுடையப்ப செட்டியார் அவர்கள் பேரனும் வழக்கறிஞர் இராமநாதன் செட்டியார் அவர்கள் புதல்வனுமான திருப்பதி M. Techக்கும் நாட்டரசன்கோட்டை சுப. ராம. லெ. இராமகிருஷ்ணன் செட்டியார் அவர்கள் பேத்தியும் லெட்சுமணன் செட்டியார் அவர்கள் புதல்வியுமான வள்ளிநாயகி B. Com. க்கும் 1-11-89 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ பாங்க் ஆஃப் மதுரையின் தலைமைப் பொது மேலாளராகப் பணியாற்றிவந்த திரு. எஸ்பி. சபாபதியை இப்போது ரிசர்வ் வங்கி பாங்க் ஆஃப் மதுரையின் தலைவராக நியமித்துள்ளது.

ஃ அகமதாபாத்தில் டிசம்பர் '89 மத்தியில் நிகழ்ந்த அனைத்திந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் துணைப் பொதுச் செயலாளராக காரைக்குடியைச் சேர்ந்தவரும் இந்தியன் வங்கியின் அதிகாரியுமான திரு. கி. நா. கண்ணன் மீண்டும் மூன்றாண்டுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஃ திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் தலைமையிலான சுமார் 15 பேர் கொண்ட குழு 1-3-90 அன்று இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் பாத யாத்திரையாகப் புறப்பட்டுச் செல்கிறது. இதற்கான முன்னேற்பாடுகளை 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோ. செய்து வருகிறார்.

ஃ திருவனந்தபுரத்தில் உள்ள அரியக்குடியைச் சேர்ந்த செல்வி வீர. மீனாட்சி (பொறியாளர் திரு. என். வீரப்பனின் புதல்வி) M. B. B. S. படிக்க தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் கேரள மாநில மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வில் 242 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஃ அண்மையில் இயற்கை எய்திய, பழநிக் கோயில் அருளாடியாரான கு. ப. சுப. சு. சுப. பழநியப்ப செட்டியார் அவர்களின் புதல்வர் திரு. பழ. பழநியப்பன் பாங்க் ஆஃப் மதுரையில் எழுத்தராகப் பணியாற்றி வருகிறார்.

ஃ மதுரை வடக்கு ஆடி வீதியில் உள்ள திருவள்ளுவர் கழகத்தில்

7-1-90 ஞாயிறன்று மாலை 6 மணி அளவில் பழம்நீ கவியரங்கம் நிகழவிருக்கிறது.

ஃ நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கம் 29-1-90 திங்களன்று பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்களை நடத்தி வைக்க உள்ளது.

ஃ பள்ளத்தூர் ஸ்ரீ சௌந்தராஜப் பெருமாள் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா தை மீ 16 உ (29-1-90) நிகழவிருக்கிறது.

ஃ பள்ளத்தூர் நகரச் சிவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா தை மீ 19 உ (1-2-90) நிகழவிருக்கிறது.

ஃ அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோயில் சார்பாக தை மீ 3உ (16-1-90) நாட்டரசன்கோட்டையில் செவ்வாய்ப் பொங்கல் நடைபெற உள்ளது.

ஃ அருள்மிகு புல்வாய்நாயகி அம்மன் திருக்கோயில் சார்பாக தை மீ 3 உ (16-1-90) பாகனேரியில் செவ்வாய்ப் பொங்கல் நடைபெற உள்ளது.

ஃ மதுரை நகர விடுதிக்குப் புதிய கட்டிடம் எழுப்பப்படவிருப்பதால் அங்குள்ள நமது ''நகரத்தார் குரல்'' அலுவலகம் விரைவில் வேறு இடத்திற்கு மாற உள்ளது.

ஃ 'திருமுறைத் தொண்டர்' ஒக்கூர் திரு. ஆத. மாதவன் செட்டியாரின் பொருளுதவியால் மதுரை தெற்காடி வீதியில் உள்ள பன்னிரு திருமுறை மன்றத்தின்



வலையபட்டி மு. நா. அ. ந. முத்துவள்ளியப்ப செட்டியார் - பாப்பாயி ஆச்சியின் 80 ஆம் ஆண்டு நிறைவு சதாபிஷேக விழா 26-11-89 ஞாயிறன்று வலையபட்டியில் சிறப்பாக நடைபெற்றது. பிள்ளைகள், பேரன் பேத்திகள், கொள்ளுப் பேரன் பேத்திகள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் ஆசி பெற்றார்கள்.

36 ஆவது ஆண்டு விழா 12-12-89 முதல் 14-12-89 வரை மூன்று தினங்கள் கொண்டாடப் பெற்றது.

ஃ சிதம்பரம் நகரத்தார் சங்கத்தின் சார்பாக சிதம்பரம் ஆறுமுக நாவலர் மேல்நிலைப் பள்ளியில் ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ் வாணன் 30-12-89 அன்று சிறப்புரை ஆற்றினர்.

ஃ அமராவதிபுதூர் ஸ்ரீ சாரதா சேவாச்ரமத்தின் 12 ஆவது ஆண்டு விழா, அன்னை ஸ்ரீசாரதா தேவியாரின் 137 ஆவது பிறந்த தினவிழா மற்றும் இரு விழாக்கள் அமராவதிபுதூர் ஸ்ரீசாரதா சேவாச்ரமத்தில் 31-12-89 அன்று நடைபெற்றன.

ஃ உ. சிறுவயல் அருள்தரு தேனாற்றங்கரை ஆஞ்சநேயர் திருக்கோயிலின் நான்காம் ஆண்டு ஆஞ்சநேயர் ஜெயந்தி உற்சவம் 27-12-89 அன்று நடைபெற்றது.

தஞ்சை சங்கம்: புதிய நிர்வாகிகள் தேர்வு

தஞ்சாவூர் நகரத்தார் சங்கத்திற்கு 1989-90, 1990-91 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அரசு ஏ. சுப்பிரமணியன் அவர்கள் தலைவராகவும் திரு. ஆர்எம். ஜோதிலிங்கம், திரு. எம்ஆர். அண்ணாமலை ஆகிய இருவரும் துணைத் தலைவர்களாகவும் திரு. பிஆர். அருணாசலம் செயலாளராகவும் திரு. எல். இராமசாமி, திரு. எஸ்பி. அருணாசலம் ஆகிய இருவரும் இணைச் செயலாளர்களாகவும் திரு. ஏஎன். சோமசுந்தரம் பொருளாளராகவும் தேர்வுசெய்யப் பெற்றுள்ளனர். நகர விடுதியும் 387/P பாம்பாட்டி தெரு, கீழவாசல், தஞ்சாவூர் 613001 என்ற முகவரியில் இயங்கி வருகிறது.

அரு. சோ. வுக்குப் புதிய பட்டம்!

சென்னையில் ஏவி. எம்- ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் தமிழ்ப் பணி இயக்கத்தின் சார்பில் 16-12-89 அன்று நிகழ்ந்த பாரதியாரின் 108 வது பிறந்த தின விழாவில் 'காசி ஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்களுக்குப் ''பாரதி தமிழ்ப்பணிச் செல்வர்'' என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பெற்றது. திரு. அரு. சோ. தமிழ்நாடு மாநில பாரதி தமிழ்ப்பணி இயக்கத் துணைத் தலைவராகவும், பசும்பொன் மாவட்ட அமைப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

திருமணம்

தூத்துக்குடி 'ஸ்பிக்' நிறுவன இணைப் பொது மேலாளர் திரு. வி. சிதம்பரம் (சொக்கநாதபுரம்) அவர்களின் புதல்வன் செல்வன் ஐயப்பன் M. Com. க்கும் நெற்குப்பை திரு. சோம. சொ. பெரியணன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி சேது M A க்கும் 3-12-89 அன்று நெற்குப்பையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த வாழ்த்தரங்கில் பலர் வாழ்த்திப் பரிசுகள் வழங்கினர். சமயப் பரப்புநர் திரு. பூதலிங்கம் வாழ்த்துப்பா வழங்கினர்.

நகரத்தார் புத்தக வங்கியின் கையேடு

மதுரையில் 1-1-90 அன்று வெளியிடப்பட்டுள்ள நகரத்தார் புத்தக வங்கியின் கையேட்டில் மதுரையில் உள்ள கல்லூரிகள் கற்பித்து வரும் பாடங்களின் விவரங்களும் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், கணக்காய்வாளர்களின் முகவரிகளும் I.A.S. மற்றும் C A. தேர்வு முறைகள் பற்றிய விவரங்களும் மற்றும் நகரப் பேருந்துகளின் வழித்தட விவரங்களும் இடம் பெற்றுள்ளன. இதனை பிரதி ஒன்றுக்கு நன்கொடை ரூ. 2 கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம் எனப் புத்தக வங்கியின் தலைவர், வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி தெரிவித்துள்ளார்.

லெ. மு. மு. முத்துமாணிக்கம்

திரு. லெ. மு. மு. முத்து மாணிக்கம் தேவகோட்டையைச் சேர்ந்தவர். சமூகப் பற்றுடைய வர்; பொது நலத் தொண்டர்.

பழம்நீ பாத யாத்திரைக் குழுவை 1965 ஜனவரியில் தொடங்கி கடந்த 25 ஆண்டு களாகத் தொடர்ந்து பழநிக்கு வழிநடைப் பயணம் மேற் கொண்டு வருகிறார். பழநிக்கு 50, 60 பேரை தம் பொறுப்பில் அழைத்தும் செல்கிறார்.

1974 முதல் பழநி அடிவாரம் பட்டக்காரர் மடத்தில் (காவடி செலுத்திய மறுநாள்) - சுமார் ஆயிரம் பேருக்கு - கடந்த 15 ஆண்டுகளாக மதிய உணவு வழங்கி வருகிறார்.

1981 முதல் பழம்நீ கவி யரங்க நிகழ்ச்சியையும் 1984 முதல் கூட்டு வழிபாட்டு நிகழ்ச்சி யையும் நடத்தி வருகிறார். 1981 முதல் கவியரங்கை ஒட்டி இலவச மாக உணவும் வழங்கி வருகிறார்.

பக்திப் பாடல்களின் தொகுப் பான 'பழம்நீ' நூலை - வழி நடைப் பயணத்தை ஒட்டி - கடந்த பதினொரு ஆண்டுகளாகத் தயாரித்து அன்பளிப்பாக வழங்கி வருகிறார்.

1965ல் சிறிய அளவில் வெளி யிட்ட முருகன் பாமாலை நூலை இப்போது அதிகப் பக்கங்களில் வெளியிட்டு வருகிறார்.

1964ல் தனக்கு, வயிற்றில் ஒரு அறுவைச் சிகிச்சை நடந்த தாகவும் அப்போது தன் உறவி னர் ஒருவர் ''சும்மா இருந்தால் பழநிக்கு நட'' என்று தனக்கு ஆலோசனை கூறியதாகவும் அது முதல், தான் பழநிக்கு வழி நடைப் பயணம் மேற்கொண்டு வருவதாகவும் திரு. முத்து மாணிக்கம் கூறினார். ''பழநிக்கு நடப்பதில் பலன் இருக்கு... அத னால் தொடர்ந்து நடந்து வருகி றேன். எங்கள் குடும்பத்தில் பழ நிக்கு நடக்காதவர்கள் இல்லை'' என்று மேலும் கூறினார்.

இவர் கடந்த 15 ஆண்டுக ளாக ஐயப்பன் கோவிலுக்கு ஆண்டுக்கு இரு முறை (சித்திரை விஷு, மார்கழி) சென்று சாஸ் தாவை வணங்கி வருகிறார்.

இவர் இப்போது விருதுநகர் தமிழ் நாடு மின்சார வாரியத்தில் (மத்திய அலுவலகம்) நிர்வாக மேலாளராகப் பணியாற்றி வரு



கிறார். இவருடைய மகன் திரு. எம். லெட்சுமணன் B. Sc. (முனை வர் சுப. அண்ணாமலை அவர்களின் மாப்பிள்ளை) ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் Development Officer ஆகப் பணியாற்றி வருகிறார். இவர் 1987-88ல் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் பாலிஸிதாரர் களைச் சேர்த்து 'குரோர்பதி' பட்டம் பெற்றுள்ளார்.

திரு. முத்துமாணிக்கம் பெய ருக்கேற்ற வகையில் குணத்தில் முத்தாக.. மாணிக்கமாகத் திகழ் கிறார்.

— எல். சுந்தரம்

தட்டு யாருக்கு?

மன்னர் ஒருவரிடம் பரிசில் பெற, புலவர் ஒருவர் வந்தார். மன்னரின் குண நலன்களைப் புகழ்ந்து பாடி, மன்னரை மகிழ்வித்தார். மனமகிழ்ந்த மன்னர் பொன் முடிப்பு ஒன்றை வெள்ளித் தட்டில் வைத்து புலவருக்குப் பரிசளித்தார். பொன் முடிப்புடன் வெள்ளித் தட்டையும் பெற எண்ணினார் புலவர். வெள்ளித் தட்டும் தனக்கு உண்டா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பிய புலவர் மன்னரிடம் ''தட்டு இவ்விடத்திலா அல்லது அவ்விடத்திலா?'' என்று கேட்டார். 'தட்டு' என்பதற்கு 'தட்டுப்பாடு' என்றும் பொருள் உண்டு தட்டு தனக்குத்தான் என்று சொன்னால் புலவர் வாக்குப் பலிதமாகி தட்டுப்பாடு வந்தாலும் வந்துவிடும் என்று எண்ணிய மன்னர் புலவரிடம் ''தட்டு தங்களிடமே இருக்கட்டும்'' என்று சொல்லி பொன் முடிப்புடன் வெள்ளித் தட்டையும் சேர்த்துப் புலவரிடம் கொடுத்துவிட்டார்.

— அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்

காரைக்குடி

திருமணம்

அருளாடியார் திரு. பழநியப்ப செட்டியாரின் அணுக்கத் தொண்டராகிய தேவகோட்டை திரு. எல். மாணிக்கம் செட்டியாரின் புதல்வி அலமேலுக்கும் தேவகோட்டை லெட்சுமணன் செட்டியார் புதல்வன் செந்தில்நாதனுக்கும் 30-11-89 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது. அவ்வமயம் நிகழ்ந்த வாழ்த்தரங்கிற்குக் 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கி மணமக்களை வாழ்த்தினர்.

ஃ ஃ ஃ

காரைக்குடி முரு. லெ. நா. நா. சோமையா செட்டியார் அவர்கள் (முன்னாள் நிர்வாகி, செட்டியார் பிலிம்ஸ்) புதல்வி செல்வி தனலெட்சுமி என்ற சித்ராவிற்கும் தேவகோட்டை கூ. பழ. கரு. கூராண்டான் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் B. Com -க்கும் 15-11-89 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

தேவகோட்டை சின்ன அண்ணாமலை அவர்களின் பேத்தியும் திரு. சி. அ. இராமையாவின் புதல்வியுமான செல்வி மகாலெட்சுமிக்கும் தேவகோட்டை கே. என். சபாரத்தினம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் ரவிச்சந்திரனுக்கும் 4-12-89 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

"மன உறுதி"

சளைக்காத மனமும், உறுதியும் வெற்றியைத் தேடித்தரும் சாதனங்களாகும். வயதானவர்கள், 'நம் உடல் தளர்ச்சி அடைந்துவிட்டதே; இனி நாம் என்ன சாதிக்கப்போகிறோம்' என்று மனத்தளர்ச்சி அடைய வேண்டாம்.

கான்ட் என்ற ஜெர்மன் அறிஞர், தம் 74 ஆம் வயதில் மனித ஆராய்ச்சி, ஆத்மீகம், ஒழுக்கம் ஆகியவை பற்றி ஓர் அரிய நூலை எழுதினார். மகாகவி டென்னிசன் தம் 85 ஆம் வயதில் பவுஸ்டஸ் என்ற அரிய நூலை எழுதினார். ஹாப்ஸ் என்ற மூதறிஞர் தம் 88 ஆம் வயதில் இலியத் என்ற பழைய கிரேக்க இதிகாசத்தை மொழி பெயர்த்தார். அமெரிக்கப் பேரறிஞரான பெஞ்சமின் பிராங்ளின் தம் 80 ஆம் வயதில் தம் சுய சரிதையை எழுதினார். இவை அனைத்தும் பின்னர் உலகப் புகழ்மிக்க படைப்புக்கள் ஆகின.

"புற ஆற்றலை விட, மன ஆற்றலுக்கு மூன்று மடங்கு சக்தி உண்டு. மனம்தான் துடிப்புடன் இருக்க வேண்டும்" என நெப்போலியன் கூறியுள்ளார்.

"ஆண்டுகள் செல்லச் செல்ல தோலில் சுருக்கம் விழும். அதே போல் இதயத்திலும் சுருக்கம் விழ எட்டிப் பார்க்கும். இதயத்தில் சுருக்கம் விழுந்து விடாமல் இருக்க எப்போதும் ஆர்வத்துடன் செயலாற்றிக் கொண்டே இருங்கள்" என ஸேம்யல் உல்மென் கூறியுள்ளார்.

மனமே முதன்மையானது என்பதைக் குறிக்க, ஆங்கிலத்தில் **"AGE IS NOT COUNTED BY YEARS BUT BY MIND"** என்பார்கள்.

— மேலைச்சிவபுரி முத்துராமன், திருச்சூர்.

திருமணம்

செவ்வூர் ராம. கும. இராமநாதன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் இராங்கியம் நா. அ. கும. அண்ணாமலை செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சேது என்ற பெரியகருப்பனுக்கும் 8-12-89 அன்று செவ்வூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மேலைச்சிவபுரி, சிங்கப்பூர் மு. அ. இராமநாதன் செட்டியார் அவர்களது புதல்வி செல்வி மீனாட்சிக்கும் வலையபட்டி கும. ராம. குமரப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் காசி விஸ்வநாதனுக்கும் மேலைச்சிவபுரியில் 8-12-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இராமேஸ்வரம் - காசி இரண்டாம் நடைப் பயணம்

இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு 3200 கி. மீ. தொலைவு நடந்து செல்லும் பாதயாத்திரை 1983 ஆம் ஆண்டில் 'காசி ஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்கள் தலைமை தாங்கிய குழுவினால் வெற்றிகரமாக நடத்தப்பெற்றது. இப்பொழுது மீண்டும் அந்தப் பாத யாத்திரை மேற்கொள்ள திருச்செந்தூர்ப் பாத யாத்திரைக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இரண்டாம் நடைப் பயண அமைப்புக் கூட்டம் தேவகோட்டையில் திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் இல்லத்தில் 30-11-89 அன்று 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் இனிதே நிகழ்ந்தது. இரண்டாம் நடைப் பயணக் குழுவுக்குத் திருத்தொண்டர் திரு ஆர். வயிரவன் அமைப்பாளராகவும், 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் ஆலோசகராகவும் முன்னோடியாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் திரு. ஆர். வயிரவன் தலைமையில் சுமார் 15 பேர் அடங்கிய குழு இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் பாதயாத்திரையினை சுக்கில ஹ மாசி மீ 17 உ (1-3-1990) அன்று தொடங்குகிறது. இவர்கள் 26-2-90 அன்று தேவகோட்டையிலிருந்து இராமேஸ்வரத்திற்குப் புறப்படுகின்றனர். 27-6-90 அன்று காசியை அடைகின்றனர். இராமேஸ்வரத்திலிருந்து தேவகோட்டை, காரைக்குடி, செட்டிநாடு, புதுக்கோட்டை, திருச்சி, நாமக்கல், சேலம், ஓசூர், கிருஷ்ணகிரி, பெங்களூர், ஹைதராபாத், நாகபுரி, ஜபல்பூர், மிஞ்சாபூர், நாராயண்பூர் வழியாக 4 மாதங்களில் காசியை அடைவர். இவர்களது பயணம் வெற்றி பெற ''நகரத்தார் குரல்'' வாழ்த்துகிறது.

நகரத்தார் புத்தக வங்கி

மதுரை நகரத்தார் புத்தக வங்கி ஒவ்வொரு ஆங்கில மாதமும் இரண்டாவது சனிக்கிழமையன்று மாலை மணி 3-00 முதல் 5-00 வரையும் நான்காவது ஞாயிற்றுக்கிழமையன்று காலை மணி 9-00 முதல் 12-00 வரையும் செயல்படும் என அதன் தலைவர் திரு. பழ. இராமசாமி அறிவித்துள்ளார்.

உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' டிசம்பர்'89 இதழை முழுமையாகப் படித்தேன். SP. முத்துராமன், லேனா தமிழ்வாணனது பேட்டிகள் மிக அருமை. கவிஞர் சொக்கு சுப்பிரமணியனின் மாணிக்க விநாயகர் பாட்டு அற்புதம். பாராட்டுக்கள்.

காசிஸ்ரீ அரு. சோ.
காரைக்குடி

இயக்குநர் SP. முத்துராமன் அவர்களின் பேட்டி - பத்திரிகை ஆசிரியர் லேனா அவர்களின் பேட்டி மிக அருமை. இதுபோல் பல துறைகளிலும் சாதனை படைத்த நம்மவர்களைப் பேட்டி கண்டு பாராட்டுவதில் குரலுக்கு நிகர் குரலே.

வை. அழகப்பன் B.Sc
லாலாப்பேட்டை

திரு. தமிழண்ணல் திரு. சுப. அண்ணாமலை போன்ற அறிஞர்களின் எழுத்துக்களுடனும் நல்ல பேட்டிகளுடனும் புத்தாண்டு இதழ் வரப்போவது மகிழ்ச்சியைத் தருகிறது.


ஏ. முத்துராமன்
திருச்சூர்

''நகரத்தார் குரல்'' டிசம்பர்'89 இதழில் வெளிவந்த ஆடிட்டர் திரு. சுப. சித. பழநியப்ப செட்டியார் அவர்களின் பேட்டி மிக அருமை. ஆடிட்டர் அவர்களை நான் நன்கு அறிந்தவன். அவர்களின் உதவியால் உயர்ந்தவன். அவர்கள் நம் இனத்தவர்களுக்கும் மற்றும் ஏனையோர்க்கும் ஏராளமான உதவிகளை எந்தப் பிரதிபலனும் இன்றிச் செய்து வருகிறார்கள்.

அவர்கள் பேட்டியினை மிக அருமையாக வெளியிட்ட நகரத்தார் குரலுக்கு நன்றி.

தேவகோட்டை
V.R. லெட்சுமி நாராயணன்
சென்னை

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
14-5-1955

மறைவு :
24-1-1989

டாக்டர் ப. அண்ணாமலை

அண்ணன் விண்ணில் நிறைந்து
ஆகிவிட்டது ஆண்டு ஒன்று !
இவ்வுலகில் இன்னமுறை வாழ - அவர்
ஈந்து சென்ற தத்துவங்கள் உண்டு !
உவப்புடனே காவடி தாங்க
ஊர்விட்டு ஊர்வந்த அண்ணன்
எத்துணை துன்பம் வரினும்
ஏணிப்படியாய் அது கடந்து
ஐயம் என்பதை அறமறத்து
ஒரு மனதாய் 'முருகா' என்ற நாமம்
ஓங்கி நிற்க, பாதங்கள் ஓடாய்த் தேயினும்
ஓய்வெடுக்க மனமின்றி ஒரே நோக்குடன்
ஒய்யார நாயகனை பழநியிலே தரிசிக்க
மெய் வருத்திப் போனாரே. அந்தத்
தெய்வத்துக்குக் கண்ணில்லையோ ! எங்கள்
கண்ணையே பறித்துக் கொண்டானே !
மண்ணில் அவர் மறைந்து ஆண்டுகள் ஆறினும்
— அன்னார்
நன்மக்கள் நெஞ்சில் நிறைந்து வாழுவார் பல்லாண்டு !

பழ. சுப்பிரமணியன்
(நெ. மு. ப. சு. அ. பழ.)
பலவான்குடி

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 21-08-32

மறைவு: 25-12-87

S. செந்தில்நாதன் செட்டியார்

சித. சா. இல்லம், தேவகோட்டை.

நிதிப் பள்ளியில் நிலையான ஆங்கில
வரலாற்று ஆசானாய்த் திகழ்ந்தீர்கள்.
மாணவ மாணவியர் மனம் மகிழ.
ஆங்கிலத்தை எளிய நடையில் கற்பித்தீர்,
வரலாற்றை குறிப்பின்றிக் கற்பித்தீர்,
நகைச்சுவை கலந்த நடையுடையீர்
மூச்சு நிற்கும் வரை உழைத்தீர்
நிறைகுடம் நீர்! வரலாற்றுப் புத்தகம் நீர்!
வானம் சென்றாலும் நும் புகழ் ஓங்குக!
ஆக்கப் பணிதனை நோக்கமாகக் கொண்டு
நிதிப் பள்ளி உயர செயலாற்றினீர்
காணும் நினைவு என்றுமே பொன் நிற்பதாக!

S. இந்திராள்
(மனைவி)

S. விஸ்வநாதன்
(மகன்)

M. விசாலாட்சி மணிகண்டன்
(மகள்)

S. மணிகண்டன்
(மருமகன்)

60-E, ஸ்டேஷன் ரோடு, ஆலந்தூர், சென்னை–600 016

ஈரோடு சங்கத்தில் பாராட்டு விழா

ஈரோடு நகரத்தார் சங்கத்தில் அரசு வழக்கறிஞர் திரு. ஏஆர். லெட்சுமணனுக்கு 10-12-89 அன்று பாராட்டு விழா நடைபெற்றது. திருவாளர்கள் எஸ்பி. முத்துக்கருப்பன், பிஎல். மாயாண்டி, லெ. முத்தையா செட்டியார், கோவை சங்கத்தின் துணைத்தலைவர் திரு. எஸ்இ. எஸ்வி. நாராயணன் பேராசிரியர், முனைவர் கரு. முத்தையா ஆகியோர் சிறப்பு விருந்தினரைப் பாராட்டிப் பேசினர்கள்.

திரு. ஏஆர். லெட்சுமணன் பாராட்டுக்கு ஏற்புரை நல்கிய போது நம்மவர்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனைகளை வழங்குவதாகவும் குறைந்த வருவாய் உடைய நம்மவர்களுக்கு இலவசமாக வழக்குகளை நடத்தித் தரத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

M. கண்ணன் பி. காம்.,

தோற்றம் : 13—10—1964
மறைவு : 20—1—1984

கண்ணீர் அஞ்சலி



கங்கைதனைக் கண்டவுடன்
கண்ணுநீ எமை மறந்து
கண்கலங்க வைத்துவிட்டு
கையசைத்துச் சென்று
விட்டாய்
ஆருண்டு இன்றோடு
ஆனபோதும் எம்மனதில்
அழியாது இன்றைக்கும்
அன்புருவாய் வாழும் தம்பி
எம்கனவை நினைவாக்க
எம்மகத்தில் மறுபடியும்
அன்போடு உருவெடுத்து
அனைவரையும்
மகிழ்விப்பாயே

KR மெய்யப்பன்
கமலா மெய்யப்பன்
விரையாச்சிலை

சித்ரா குமரப்பன் [ஆச்சி]
M. சிதம்பரம் M. முத்து
(தம்பிகள்)

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணாபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

நகரத்தார் குரல்

விளம்பர விவரம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ. 500-00
அட்டை (உள் பக்கம்)	ரூ. 300-00
முழுப் பக்கம்	ரூ. 150-00
அரைப் பக்கம்	ரூ. 75-00
கால்ப் பக்கம்	ரூ. 40-00

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் பாதிக் கட்டணத்தில் வெளியிடப்பெறும்.

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணி விழா, திருமணச் செய்திகள் ஒளிப்படத்துடன் வெளியிட (அரைப் பக்கம்) கட்டணம் ரூ. 50-00

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	ரூ 24-00
டெபாசிட் சந்தா	ரூ. 200 00

ஓர் ஆண்டுக்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சந்தாத் தொகையை M O மூலமும் பாங்க் டிராப்ட்மூலமும் அனுப்புபவர்கள் முழு முகவரியுடன் சென்ற ஆண்டு தொகை செலுத்தியதற்கான இரசீதின் எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்; அல்லது எந்த மாதம் முதல், இதழ் வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு :

''நகரத்தார் குரல்''

25, வடக்குச் சித்திரை வீதி,

மதுரை-625 001

Regd. No. TN / MA / (C) / 106 NAGARATHAR KURAL